# வரவு செலவுத் திட்ட உரை - 2017

கௌரவ தலைவர் அவர்களே,

கௌரவ அமைச்சர்களே,

கௌரவ எதிர்கட்சித் தலைவர் அவர்களே,

கௌரவ உறுப்பினர்களே,

மத்திய மாகாண சபையின் ஆறாவது மத்திய மாகாண சபையின் கூட்டத்தின் நான்காவது வரவு செலவுத் திட்ட அறிக்கையை முன்வைக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டிருக்கும் உங்கள் அனைவரையும் மிகவும் கௌரவத்துடன் வரவேற்கின்றேன். புதிய அரசு பெறுப்பேற்று இரண்டு வருடங்கள் முடிய உள்ள தருவாயில் மீண்டும் ஒரு முறை நாம் மத்திய மாகாண சபையின் மிகவும் முக்கியத்துமுடைய அறிக்கையை அதாவது எதிர் வரும் வருடத்திற்காக வரவு செலவு திட்ட அறிக்கையை உங்களிடம் முன்வைப்பதையிட்டு மிகுந்த கௌரவமாக கருதுகின்றேன்.

இந்த நாட்டில் மாகாணசபை முறை அறிமுகம் செய்யப்பட்ட நாளில் இருந்தே மாகாண மட்டத்தில் திறைசேரி மூலம் மூலதன முதலீடுகள் வழங்கப்பட்டு சகல மாகாணங்களுக்கும் சமமான அபிவிருத்திக்காக பொருத்தமான மூலதன முதலீடு செய்வதற்கான தேவையான பின்னணிகள் தயாரிக்கின்ற இந்த வேளையில் அரச முதலீடுகளை மிகவும் சிக்கனமான முறையிலே மிகந்த பலனும் செயற்திறனுமுள்ள முறையிலே மூதலீடு செய்வதற்கு 2017 ஆம் ஆண்டிற்கு செயற்பட உள்ளது.

இந்த வருடத்தில் அமைய 2017 வருடத்திற்கு எமது மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட மூலதன முதலீட்டு அளவு 57மூ இல் குறைந்துள்ளது. அப்படியாயின் 2016 வருடத்திலே 51.74 ரூ.மி மூலதன முதலீடு 2017 வருடத்திற்கு 2222 ரூ.மி தொடக்கம் 2952 ரூ.மி வரை குறைவடைந்துள்ளது. புணரமைப்பு செலவுக்காக குறைபாடு உள்ளது.

குறைநிரப்பு செலவுக்காக நிதி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. 2016 வருடத்தில் 29,418 ரூ.மி குறைநிரப்பு செலவாக (தனிப்பட்ட சம்பள கொடுப்பனவும் செலவு மற்றும் வேறு செலவுகள் உள்ளடங்கலாக) 2017 ஆம் வருடத்தில் 32,800 ரூ.மி வரை அதிகரித்துள்ளது. அதனடிப்படையில் 2017 இல் தனிபட்டவர்களது சம்பள கொடுப்பனவுக்காக பெற்றுக் கொள்ளவேண்டிய நிதி 26,280 ரூ.மி ஆக திட்டமிடப்பட்டுள்ளது. ஏனைய குறைநிரப்பு செலவாக 2017 வருடத்திகாக 6520 ஆக அறிக்கை இடப்பட்டிருந்தாலும் அதில் 3,663 ரூ.மி பணத்தொகை பொது திறைசேரி மூலம் ஒதுக்கீடு கிடைத்தது. அதனடிப்படையில் திட்டப்பட்ட மீண்டெழும் செலவுகளில் 2,857 ரூ.மி காணப்படுகிறது. இது எமது 2017 வருடத்தில் பெரும் சவாலாக உள்ளது. இதனடிப்படையில் ஆரம்ப செலவு மற்றும் மூலுதன செலவுக்காக 2017 ஆண்டிற்கான இந்த மாகாண சபைக்கு 3,266 ரூ.மி தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நாங்கள் முகம் கொடுக்கவேண்டியுள்ள பிரதான சவாலாக இருப்பது அரச வருமானத்தை அதிகரித்துக் கொண்டு சரியான நிதி முகாமைத்துவம் செய்வது மூலமாக மூலதன முதலீடுகளையும் குறைநிரப்பு செலவுகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு செயற்படுத்துவதாகும்.

கௌரவ தலைவர் அவர்களே

கடந்த வருடம் வரவு செலவு திட்டத்தை முன்வைக்கும் போது பூஜ்ஜிய முறையிலே அல்லது ணுநசழ டியளநன டீரனபநவளைபெ என்ற முறைப்படி மத்திய மாகாணத்துக்குள்ளே அரச நிதியை மிகவும் வினைத்திறனுள்ளதாக முதலீடு செய்வதற்கு முடிந்தது. அதன் மூலமாக மாகாணத்திலே வாழுகின்ற மக்களுக்கு உச்சப் பலனை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இம் முறை வரவு செலவு திட்டத்தை தயாரிப்பதற்கு தடையாக இருந்த பிரதான சவாலாக இருந்தது மூலதன முதலீட்டுக்காக

ஒதுக்கப்பட்ட நிதி வரையறுக்கப்பட்டதாகும். இருப்பினும் பல்வேறு உபாயங்களையும் உப முறைகளையும் மேற்கொண்டு மகாணத்தின் மக்களது பொருளாதாரத்தை உயர்த்திக்கொள்வதற்கு விசேட கவனம் செலத்தப்பட்டு அடுத்த வருடத்திற்காக செயற்பாடுகளை நடைமுறைபடுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறு 2017 ஆம் வருடத்தில் மத்திய மாகாண மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக செயற்படும் போது தேசிய மற்றும் சவர்தேச முறையில் கவனத்தை திருப்புவதற்காக காரணங்களைக் கண்டறிந்து அவரது கவனத்தை எம் பக்கம் திருப்பி கொள்ளவேண்டும். அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் 2017 ஆம் வருடம் வறுமை ஒழிப்பு வருடமாக பெயரிட்டுள்ளது. அதை யதார்த்தமாக்குவதற்கு நாம் செயற்படவேண்டும்.

2015 ஆம் வருடத்தில் ஐக்கிய இராஜ்ஜியத்தின். 70 ஆவது பேராளர் மகாநாட்டோடு நடைபெற்ற நிலையான அபிவிருத்திக்கான மகாநாட்டின் போது 193 நாடுகள் இணைந்து ஏற்றுக்கொள்ளப்ட்ட நிலையான அபிவிருத்திகான 2030 ஆம் வருடத்தின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏற்றுக்கொண்டு கையொப்பம் இட்ட நாடுகளில் எமது நாடும் கையொப்பம் இட்டதோடு நிலையான அபிவிருத்திக்கான குறிக்கோள்கள் 17 யையும் அதை நிறைவேற்றிக் கொள்வதற்காக 169 இலக்குகளையும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் இதை நடைமுறைப்படுத்தும் பொழுது குறிக்கோள்கள் 8 நேரடியாக மகாணசபை அதிகாரத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் இந்த நோக்கங்களையும் குறிக்கோள்களையும் வெற்றிகரமாக்கிக் கொள்வதுற்கு நாங்கள் திடசங்கற்பம்கொள்ளவேண்டும்.

வறுமை ஒழிப்பு பட்டினி போசாக்கின்மை இல்லாமல் செய்வதற்கு தேவையான சுகாதார வசதிகள் நலன்புரித் திட்டங்களுக்காக எயிட்ஸ் சயரோகம் மலேரியா மற்றும் ஏனைய தொற்று நோய்களை இல்லாமல் ஒழிப்பதற்கு பலனளிக்க கூடிய அறிவூட்டல்களை பெற்றுக்கொடுத்தல்

சுத்தமான நீர் மற்றும் சுகாதார வசதிகள் பெற்றுகொடுக்க சாதாரண விலையில் சகலருக்கும் மின்சாரம் பெற்றுக்கொடுத்தல் இனரீதியானதும் ஆண் பெண் வித்தியாசம் இன்றி சகலருக்கும் பொருளாதார ரீதியாக ஸ்தீரதன்மையை உருவாக்குவதற்கும் நிரந்தரமான முகாமைத்துவத்தை ஏற்படுத்தல் காடழிப்பை தடுத்து நிறுத்தல் என்ற இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்கு மத்திய மாகாணத்தில் விசேட கவனத்தை செலுத்த வேண்டியுள்ளது மாகாண சபை என்ற வகையிலே மேற்கூறிய நோக்கு இலக்கை அடைவற்காக நாங்கள் தற்போது திருப்தியான நிலையில் உள்ளோம் என்பதை மகிழ்ச்சியோடு கூறவேண்டியுள்ளது. சுகாதர கல்வி குடிநீர் மற்றும் சுகாதர பொது வசதிகள் மின்சாரம் ஆகிய பிரிவுகளுக்கு ஏற்ற வகையில் எமது சபை மிகவும் முன்னேற்றத்தில் உள்ளது. ஆனாலும் மிகவும் எமது கவனத்தை செலுத்தவேண்டிய புலமாக சில பிரிவுகள் இருப்பதை நான் சட்டிகாட்ட வேண்டும். வறுமை ஒழிப்பு பட்டினி மற்றும் மந்த போசனத்தை இல்லாதொழிப்பது தொற்று நோய்கள் மற்றும் தொற்றாத நோய்களை இல்லாதொழித்தல் பொருளாதார ரீதியாக மக்களை ஸ்தீர நிலைக்கு கொண்டு வருதல் சூழல் பாதுகாப்பு துறையில் நாங்கள் முன்னேற்றம் அடையவேண்டியுள்ளது.

கௌரவ தலைவர் அவர்களே

மாகாண மக்களின் நலனுக்காக அரச மற்றும் தனியார் இரு பிரிவினரையும் இணைத்துக் கொண்டு (PPP –Public Private Partnership ) மத்திய அரசின் கொள்கைக்கு இணையாக மகாணத்திற்குள் அபிவிருத்தி செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக இனி வரும் காலங்களில் விசேட கவனம் செலுத்ப்பட்டு செயல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு அபிவிருத்தி செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொழுது வருமானத்தை உயர்த்திக்கொள்வது மகாணத்தின் வரி மற்றும் ஏனைய வருமானங்களை உயர்திக் கொள்வது அரச சொத்துக்கள் மனித வளங்கள் பௌதீக வளங்களையும் மிகுந்த செயல்திறன் மிக்கதாகவும் இலாபகரமானதாகவும் ஈடுப்படுத்திக்கொண்டு மாகாண சபையின் செலவுகளை முகாமைத்துவப்படுத்திக் கொள்ளுதல் குறைவாக பயன்படுத்துகின்ற

சொத்துக்களை பாவனைக்கு பாவனையற்ற தரிசு நிலங்களை பிரயோசப்படுத்தி மாகாணத்தின் அபிவிருத்தி தேவைகளை இனம் கண்டு செயல்படுத்திக்கொள்வதற்கும் மகாணத்தில் உள்ள இயற்கை வளங்களையும் பொருத்தமான வகையில் முகாமை செய்து திட்டமிட்டு அதன் வருமானத்தை மாகாண மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு இனிவரும் காலங்களில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

விவசாயம் மூலமாக மத்திய மாகாணம் நாட்டின் தேசிய வருமானத்திற்கு பாரிய பங்களிப்பை செய்துள்ள போதும் மாகாணத்தின் விவசாயிகளின் வருமான மட்டம் தீர்மானிக்கப்படுகின்ற பொழுது தரகர்களின் கெடுபிடிகளும் பாரிய பாதக காரணியாக அமைகிறது. அதனால் உற்பத்தியாளர்களையும் நுகர்வோர்களையும் பாதுகாப்பதற்கு தரகர்களின் கெடுபிடிகளை குறைத்துக் கொள்வதற்கு புதிய நுட்ப முறைகளை இனம் காண வேண்டியுள்ளது. ஆரம்ப வசதிகள் வளர்ச்சி குன்றிய பிரதேசங்களை இட்டு விசேட கவனம் செலுத்தப்பட்டு உற்பத்தியாளர்களையும் நுகர்வோர்களையும் நேரடியாக கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு

இயன்ற பின்னணியை தயாரிக்க வேண்டியுள்ளது. விசேடமாக வாரச்சந்தை விவசாய தளங்களுக்கான போக்குவரத்து வசதிகளை அபிவிருத்தி செய்தல் பாராமரித்தல் விவசாயிகளை ஒருமுகப்படுத்தல் ஆகிய காரணங்களுக்காக விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. உற்பத்தியாளர்களிடம் உள்ள மேலதிக உற்பத்திகளை தரகர்கள் மூலமாக விற்பனை செய்வதற்கு மாற்றீடாக உற்பத்தியாளர்கள் ஒன்றாக இணைந்து ஏற்படுத்திக் கொண்ட அமைப்பு மூலமாக தகவல் பிரிவு ஒன்றை அமைத்து அதன் மூலமாக நேரடியாக நுகர்வோருக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் விவசாய தகவல் இணையம் ஒன்றை ஏற்படுத்துவது காலத்தின் கட்டாயமாக உள்ளது. உலகின் பல முன்னேற்றம் அடைந்த நாடுகள் வெவ்வேறு துறைகளுக்கான இவ்வாறான தகவல் மையங்களை ஏற்படுத்தி இருப்பதன் மூலமாக உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் நேரடியாக தொடர்பு கொண்டு கொடுக்கல் வாங்கல்களை செய்வதற்கு இலகுவாக இருக்கின்றது.

தேசிய ஒற்றுமையும் இணக்கப்பாடும்

கௌரவ தலைவர் அவர்களே

முப்பது வருடங்களுக்கு மேலாக எமது நாட்டின் இனப் பிரிவினருக்கிடையே ஒற்றுமை சகோதரத்துவம் சிதைந்து போய் அந்த கொடிய யுத்தம் முடிவடைந்து வருடங்கள் பல கடந்த போதும் மக்கள் மனங்களிலே ஒற்றுமையும் இணக்கப்பாடும் வேரூன்றிக்கொள்வதற்கு மேலும் நாம் செயல்பட வேண்டியுள்ளது.

அதிமேதகு ஜனாதிபதி மைத்திரி பால சிரிசேன அவர்களது அறிவுறுத்தல்களுக்கு அமைய முன்னால் அதிமேதகு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரத்துங்க அம்மையாரின் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற தேசிய ஒற்றுமையும் நல்லிணக்கத்திற்கான காரியத்தின் மூலம் இந்த நாட்டின் சகல இனப்பிரிவினருக்கும் தத்தமது தேசிய சமய அடையாளங்களை பாதுகாத்து கொள்வதற்கும் ஒருவரை ஒருவர் மதிப்பதற்கும் தேசப்பற்றுடைய இலங்கை மக்களாக வாழ்வதற்கு தேவையான சூழல் ஏற்பட்டு வருகின்றது.

தேசிய நல்லிணக்கபாட்டை எதிர்சந்ததியினர் மத்தியில் ஏற்படுத்துவதற்கு இந்த வருடத்தில் சகல தேசிய சமயவிழாக்களை சகல மக்கள் பிரிவினரும் ஒன்றாக சேர்ந்து நாடு முழுதும் கொண்டாட வேலைத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் மத்திய மாகாணத்தின் கடந்த காலங்களில் தைப்பொங்கல் விழா சிங்கள தமிழ் புத்தாண்டு நோன்புப் பெருநாள் போன்ற ஏனைய தேசிய விழாக்களையும் சகல இனத்தவரும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இயன்ற அளவு முடிந்தது. 2017 ஆம் ஆண்டு இந்த செயற்பாடு தொடர்ச்சியாக செயல்துறை நடைமுறை எதிர்பார்க்கப்படுகிறது.

பெருந்தோட்ட மக்கள்

எமது மத்திய மாகாணத்தில் வாழ்கின்ற ஐந்து லட்சம் வரையிலான பெருந்தோட்ட மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் நாம் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. அவர்களது வீடு கல்வி சுகாதாரம் போசாக்கின்மை மற்றும் தொழில் பாதுகாப்பு தொடர்பாக பெருந்தோட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி தொடர்பாக மாகாணம் என்ற வகையிலே கவனம் செலுத்துகின்ற அதே வேளை மத்திய அரசின் கவனத்தை இவர்களின் பால் திருப்பி இவர்களது வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு செயற்பட வேண்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தற்போதைய நல்லாட்சி அரசின் முக்கிய விடயமாக கருதி செயல்பட்டு வருகிறது. இந்த விடயம் தொடர்பாக மாகாணசபை என்ற வகையில் நமது ஒத்துழைப்பை அதி உச்ச மட்டத்தில் நாம் பெற்றுக்கொடுக்க வேண்டும். பல்லின பல்சமய மக்களிடையே ஒற்றுமை நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஒருதாயின் மக்களை ஒரு குடும்பமாக ஒன்றிய மனதோடு வாழ்வதன் மூலமாக மத்திய மாகாண மக்கள் இந்த நாட்டிற்கு மட்டுமல்ல முழு உலகத்திற்கும் ஒரு முழு உதாரணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். எவ்வாறான பிரச்சினைகள் எவ்வாறான கருத்து வேறுபாடுகள் எவ்வாறான இன மோதல்கள் நாட்டில் ஏற்பட்டாலும் மத்திய மாகாண மக்கள் ஒரே இனமாக ஒற்றுமையாகவும் சமாதானத்துடனும் அன்றும் இன்றும் வாழ்ந்து வருவது பாராட்டக் கூடிய விடயமாக நாம் கருத வேண்டும்.

அனர்த்த முகாமைத்துவம்

இந்த வருடத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை மாற்றம் காரணமாக மத்திய மாகாணத்தில் மட்டுமின்றி நாடு பூராவும் ஏற்பட்ட அனர்த்த நிலைமையின் போது எமது மாகாண சபை ஒரே குழுவாக இணைந்து ஒன்றாக செயல்படுவதற்கு தயார்படுத்தல் சமயோசித தேவையாக கருதுகிறேன். சிங்களம் தமிழ் முஸ்லிம் எந்த இனமாக இருந்தாலும் அனர்த்தத்திற்கு உட்படுவது எமது இலங்கைத் திருநாட்டின் சமூகமாகும் என்பதை நாம்

நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இன்று நிகழும் இயற்கை அனர்த்த நிலைமைக்கு மனித செயற்பாடுகளே நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றேன். இயற்கை அனர்த்திற்கு உள்ளாக கூடிய பிரதேசமாக கருதப்படும் மத்திய மாகாணத்தில் பொதுமக்களின் அன்றாட செயற்பாடுகள் சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் மேற்கொள்வதற்கு நாம் அவர்களுக்கு அறிவூட்ட வேண்டும்.

மத்திய மாகாணமானது மலைப் பிரதேசமாக அமைந்துள்ளமையால் மழை வீழ்ச்சி கூடிய காலநிலை, முறையற்ற நிலப் பாவனை காரணமாக நீரோட்டத்துடன் கூடிய மண்சரிவு சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாவதற்கான சந்தர்பங்கள் அதிகமாகும்.

எவ்வாறாயினும் அனர்த்தம் ஒன்று ஏற்பட முன் மத்திய மாகாண மக்களை காப்பாற்ற தேவையான முறையான வேலைத் திட்டம் ஒன்றை அல்லது அனர்த்த முகாமைத்துவ வேலைத்திட்டம் ஒன்றை மாகாணம் முழுவதும் முன்னெடுத்துச் செல்வதற்கு உடனடியாக செயற்பட வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம். இதற்காக உங்கள் அனைவரது ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் தேவையாக உள்ளது. மாகாணத்தில் சகல நிறுவனங்களும் இதற்காக ஒன்றினைந்து செயற்பட வேண்டும்

மாகாண அரச சேவை

கௌர தலைவர் அவர்களேஇ

இன்று மாகாண அரச சேவைக்கு தேவையான அளவு பௌதீக வளங்கள் கிடைத்துள்ளன. மிகவும் அழகான அலுவலக கட்டடங்கள், தளபாடங்கள் உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களினால் மத்திய மாகாணத்தின் பெரும்பாலான காரியாலயங்கள் முழுமைப் பெற்றுள்ளன என நான் நினைக்கின்றேன். அத் தேவைகள் வரும் காலத்தில் பூரணபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மத்திய மாகாணத்தின் அமைச்சுக்கள்/

திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் மனித வளத்தேவைப்பாடுகள் முடியுமான அளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பல நிறுவனங்களில் மனித வளத்தேவைகளில் குறைபாடுகள் நிலவி வருகின்றன. அவற்றை தாமதிக்காமல் பூர்த்திச் செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

மாகாணத்தில் சகல அலுவலகங்களிலும் நிகழ்காலத்தில் பொருத்தமான வகையில் உற்பத்தித் திறனூடாக உயிரோட்ட சேவையை வழங்கும் மக்களின் மனங்கவர்ந்த அலுவலகங்களாக மாறியுள்ளன. மாகாண அரச சேவையை நடாத்துவதற்கு அதிக பணம் செலவாகும் இக் காலக்கட்டத்தில் மாகாணத்தின் அரச சேவையின் தரமான வளர்ச்சிக்கு சந்தோசத்தை தருகிறது. சேவை அவசியமானவரின் கட்சி நிறம் இனம் சாதி மத பேதம் பார்க்காமல் மக்கள் மனங்கவர்ந்த தரமான சேவையை வழங்குதல் எமது அனைவரது கடமையாகும்.

தேசிய வேலைத்திட்டத்துடன் ஒன்றிணைதல்

மாகாணசபை என்ற வகையில் மாகாணத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை ரீதியில் செயற்படும் போது மத்திய அரசின் தேசிய ரீதியாக செயற்படுத்தம் அபிவிருத்தி வேலைத்திட்டத்துடன் இணைந்து செயற்பட வேண்டி உள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது எமது மாகாணத்திற்கு தேசிய ரீதியான பிரதான அமைச்சுக்கள்.'.திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் மூலமாக கிடைக்கும் ஒத்துழைப்பை மதிக்கின்றோம்.

தற்போதுள்ள நல்லாட்சிக்கான அரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் வழிக்காட்டலின் கீழ் செயற்படுத்தப்படும் தேசிய உணவு வேலைத்திட்டம்இ தேசிய சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டம், தேசிய போதை பொருள் அழிப்பு வேலைத்திட்டம்இ தேசிய சிறுநீரக நோய் நிவாரண வேலைத்திட்டம் மத்திய

மாகாண மக்களின் நல்வாழ்வுக்கான மிகப் பெரிய ஆதரவை பெற்றுக் கொடுத்தல் இன்றுவரை நடைமுறையில் உள்ளது. 2017 ஆம் ஆண்டிலும் இந்த வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் செயற்படுத்த வேண்டியுள்ளது.

இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நாம் விசேட கவனத்தை செலுத்த வேண்டிய காரணி ஒன்று உள்ளது. கௌரவ மாகாண சபை அமைச்சர் முறையாக பகர்ந்தளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்தி செயற்படுத்தும் செயற்றிட்டங்களிடையே அதிகளவான செயற்றிட்டங்களை செயற்படுத்துவதற்கு இதுவரை காலமும் மாகாணசபைக்கு உள்வாங்கப்படாத நிறுவனங்களுக்கே வழங்கப்பட்டது. அப்படியாயின் கௌரவ அமைச்சரால் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி செயற்படுத்தும் பெரும்பாலான செயற்றிட்டங்கள் மத்திய மாகாண சபைக்கு உட்பட்ட நிறுவனங்களினூடாக செயற்படுவது சிறந்தது என்பது எமது கருத்தாகும். உதாரணமாக- நிர்மாணிப்பு நடவடிக்கைகள், வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்இ தொழிற்பயிற்சி, விழிப்புணர்வு வேலைத்திட்டம் போன்ற அந்தந்த துறைக்கேற்ப மாகாண அமைச்சின் கீழ் அடங்கும் நிறுவனங்களின் ஊடாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாம் முகம் கொடுக்கும் சவாலாக இருப்பது இளைஞர் யுவதிகளின் தொழில் பிரச்சினையை குறைத்தக் கொள்வதற்கு தேவையான குறுகிய நீண்ட கால தீர்வுகளை பெறுவதாகும். இதற்காக தனியார் துறையில் வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தனியார் துறையினருடன் உடன்படிக்கை செய்வதன் மூலம் தனியார் துறையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கி வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தோடு ஆளும்கட்சி, எதிர்கட்சி அனைவரது ஒற்றுமையும் ஒத்துழைப்பும் மத்திய மற்றும் பாரிய அளவிலான ஒன்றிணைந்த செற்றிட்டங்களை

செயற்படுத்துவதன் மூலம் புதிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்

அரச செலவை முகாமை செய்யும் போது கொண்டாட்டங்கள், கண்காட்சி போன்றவற்றை குறைத்து தேவையான செயற்றிட்டங்களை மட்டும் செயற்படுத்துவதற்காக நிதிஒதுக்கீட்டை பயன்படுத்த வேண்டும்.

கௌரவ தலைவர் அவர்களே

நான் இதிலிருந்து எமது மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் ஊடாக பொது திறைசேரியலிருந்து பெற்றுக் கொள்ளும் நிதி ஒதுக்கீடும் அவ் ஒதுக்கீடுகளை பகிந்தளிக்கும் முறையை முன்வைக்க ஆயத்தமாகின்றேன்.

| | |
|---|---|
| வருமானங்களும் செலவுகளும் | ரூபா மில்லியன் |
| இணைந்த நிதியம் | 22,489,338 |
| அரசினால் வழங்கப்படும் நிதி | 4,140.000 |
| மாகாண வருமான இலக்கு | 1,629.000 |
| (முத்திரைக் கட்டணம்இ நீதிமன்ற தண்டப்பணம் தவிர) | |
| உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மாற்ற வேண்டிய வருமானம் | |
| முத்திரைக் கட்டணம் | 1,600.000 |
| நீதிமன்ற தண்டப்பணம் | 85.000 |
| மாகாண அபிவிருத்தி நிதியம் | 1,168.930 |
| உபமானிய பங்களிப்பு | 388.800 |
| வெளிநாட்டு உதவி | 665.000 |
| மொத்தம் | **32,166,068** |
| செலவு | ரூபா மில்லியன் |
| மூலதனச்செலவு | 2,222,730 |
| மீள்புதுப்பிக்கபடக்கூடிய செலவு | 29,943,338 |
| | **32,166,068** |

மீள்புதுப்பிக்கப்படும் செலவுகள் கீழ் குறிப்பிட்டவாறு ஒதுக்கப்படும்

| | |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| ஆளுணர் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் | 15.884 |
| சபை செயலாளர் அலுவலகம் | 119.180 |
| முதலமைச்சர் மற்றும் அலுவலக உத்தியோகத்தர் | 29.545 |

| | |
|---|---|
| உள்ளூராட்சி திணைக்களம் | 2,148.000 |
| சுகாதார அமைச்சு மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் | 13.300 |
| வீதி அமைச்சு மற்றும் அலுவலக உத்தியோகத்தர் | 13.156 |
| கைத்தொழில் அமைச்சு | 14.876 |
| விவசாய அமைச்சு | 14.675 |
| மாகாண அரசசேவை உத்தியோகத்தர்கள் சம்பளம் மற்றும் ஏனைய செலவு | 27,574.722 |
| மொத்தம் | **29,943.338** |

இந்த மூலதன செலவினுள் வெளிநாட்டு உதவி 665,000 ரூபா மில்லியன் கிடைப்பதுடன் அந்த நிதி செயற்றிட்டத்திக்கு செலவு செய்ய வேண்டும். மிகுதி நிதியான 1557,73 நிதி மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அந்தந்த துறைகளுக்குரிய அமைச்சுக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

கௌரவ தலைவர் அவர்களே

மூலதன செலவாக கிடைக்கும் நிதி 2016 ஆம் ஆண்டை விட 2951.61 ரூபா மில்லியன்களால் குறைக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப 2017 வருடத்திற்காக மூலதன செலவாக எமது மாகாண சபைக்கு கிடைக்கும் தொகை 2,222.73 ரூ.மி ஆகும். இந்த பணத் தொகை ஒவ்வொரு விடயத்திற்கும் நிதி ஆணைக்குழு மூலம் ஒதக்கி

கல்வி அபிவிருத்தி

கௌரவ தலைவர் அவர்களே

மாணவ சந்ததிகளுக்கு உயர் தரத்துடன் கூடிய கல்வியில் சமவாய்ப்புக்களை வழங்குவதற்காக மலைநாட்டு கல்வி முறையை பலப்படுத்தும் முகமாக மத்திய மாகாணத்தில் உள்ள 1.574 பாடசாலை (தேசிய பாடசாலைகள் 54 லும் உள்ளடங்களாக) களில் 31,302

ஆசிரியர்களினூடாக 531,063 மாணவர்களின் அறிவு திறன் வளர்ச்சிக்காக 2016 ஆம் ஆண்டில் கல்வித்துறையில் மனித பௌதீக வள அபிவிருத்திக்காக வழங்கிய ஒத்துழைப்பு பெருமிதத்திற்குரியது. அவ்வேளையில் ஒன்றிணைந்த நிதியின் கீழ் 1000.00 மில்லியன் ரூபாவும் உலக வங்கி நிதியத்தின் கீழ் 430.00 மில்லியன் ரூபாயும் நெனோதா வேலைத்திட்டத்தின் கீழ் 250.00 மில்லியன் ரூபாயும் யுனிசெப் நிதி உதவியின் கீழ் 24.04 மில்லியன் ரூபாயும் என்ற அடிப்படையில் 1704.00 மில்லியன் ரூபாய் நிதி முதலீடு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக பிரதான அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படும் "அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை" வேலைத்திட்டத்தின் கீழ் 6இ605.00 மில்லியன் ரூபா நிதி கிடைப்பது மாகாணத்தின் கல்வி அபிவிருத்திக்கு உறுதுணையாக அமையும்.

இந்த நிதியத்தினை பயன்படுத்தி 2016 ஆம் ஆண்டு 137 புதிய கட்டட நிர்மாணங்களும் 270 நீர் வழங்களும் 211 சுகாதார வசதிகளும் 18 பாடசாலையை விட்டு இடைவிலகிய பிள்ளைகளுக்கான தொழில் பயிற்சி வேலைத்திட்டங்களும் 73 பாடசாலை நவீன மயப்படுத்தல் வேலைத்திட்டங்களும் 127 ஆசிரியர் விடுதிகள் அமைத்தலும் புனரமைத்தல் மற்றும் வேறு பல வேலைத்திட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டுள்ளன என குறிப்பிட விரும்புகின்றேன்.

பௌதீக அடிப்படை வசதிகள் அபிவிருத்தின் கீழ் கட்டிடங்கள் கட்டுதலும்இ நவீன மயப்படுத்தலும், மின்சாரம் மற்றும் குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதிகளை பூர்த்தி செய்தல், ஆசிரியர் விடுதிகள் அமைத்தல், பற்சிகிச்சை நிலையங்களை புனரமைத்தல் மற்றும் நவீன மயப்படுத்தல், மரத் தளபாட உபகரணங்கள் போன்ற பௌதீக வளங்களை மேம்படுத்தல், மனித வள அபிவிருத்தியின் போது தொழில் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கல்வியின் தர உறுதிப்பாட்டை அபிவிருத்தி செய்வதற்காக செயலமர்வுகளை நடாத்துதல், தேசிய மட்ட பரீட்சையின் பெறுபேறுகளை அதிகரிக்கும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றும்

பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்குதல் போன்ற வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

யாவருக்கும் சம கல்வி வாய்ப்புக்களை வழங்குவதை உறுதிப்படுத்தும் மூலமாக க்'ட பிரதேசங்களில் ஆசிரியர் குறைபாடுகளை நிரப்புவதற்காக 2016 ஆம் ஆண்டு பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகள் 1429 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவற்றில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கில பாட ஆசிரியர்கள் 545 பேரும் தொழில்நுட்ப விஞ்ஞான டிப்ளோமாரிகள் 375 பேரும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் 476 பேரும் மற்றும் தொழில்நுட்பப் பட்டதாரிகள்/டிப்ளோமாதாரிகள் 33 பேரும் உள்ளடங்குவர். இதற்கு மேலதிகமாக பெருந்தோட்டத்தை அண்மித்த பிரதேசங்களில் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு உதவி ஆசிரியர்கள் 269 பேரும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

மத்திய மாகாணத்தில் கல்வியின் தரத்தை அபிவிருத்தி செய்வதற்கு முழுமையான கண்ணோட்டம் செலுத்த வேண்டியுள்ளது. மாகாணத்தின் பரீட்சை பெறுபேறுகளை நோக்கும் போது கஸ்ட பிரதேசங்களில் ஏற்பட்ட முன்னேற்றம் மகிழ்ச்சியளிக்கிறது. வி'ேடமாக வில்கமுவஇ வலப்பனை போன்ற வலயங்களில் க.பொ.சா/த பரீட்சையில் பெறுபேறு அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் கல்வி பொது சாதாரணதர பெறுபேற்றின் படி கண்டி வலயம் நாட்டில் உள்ள 98 கல்வி வலயங்களில் முதலிடத்தைப் பெற்றது மட்டுமல்லாது 2015 ஆம் ஆண்டு கல்வி பொது சாதாரணதர பெறுபேற்றை நாட்டில் உள்ள சிறந்த பாடசாலைகளில் 54 ஆவது இடத்தை கண்டி சுவணர்மாலி பெண்கள் பாடசாலை பெற்றுக்கொண்டது. 2014 ஆம் ஆண்டு பெறுபேறு 2015 ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள 98 கல்வி வலயங்களில் கல்வி பொது சாதாரணதரப் பெறுபேற்றில் தெல்தெனியா கல்வி வலயம் 7.76 பெறுபேறு அதிகரிப்பைக் காட்டி இலங்கையில் அதிக முன்னேற்றத்தை காட்டிய வலயமாக திகழ்கின்றது. 2015 ஆம் ஆண்டு க.பொ.சா.ு.த பெறுபேற்றில் 670 மாணவர்கள் 9 பாடங்களிலும் அதிவிசேட திறமையை பெற்றதுடன் க்'ட பிரதேசமாக உள்ள வில்கமுவ வலயத்திலும்

முதன்முறையாக 9 மாணவர்கள் அதிவிசேட சித்திகளை பெற்றமை கல்வியின் சமவாய்ப்பு அபிவிருத்திக்கு சிறந்த உதாரணமாகும்.

அதே போல எல்லோரும் அவதானத்தை செலுத்த வேண்டிய காரணம் ஒன்று உண்டு. பெற்றோர்களிடையே போட்டி அடிப்படையிலான பரீட்சையாக பிள்ளைகளை பாரிய க'டத்திற்கு உள்ளாக்கியுள்ள 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையானது மாகாணத்தின் ஏனைய உயர் பரீட்சை பெறுபேற்றுடன் ஒப்பிடும் போது

அதுபோலவே மாகாணத்தின் சகல பாடசாலைகளிலும் 5ஆம் தர புலமை பரிசில் பரீட்சையில் மாணவர்களை சித்தியடையச் செய்வதற்கு கூடிய அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்பது இங்கே குறிப்பிட வேண்டும். மத்திய அமைச்சின் மூலமாக செயற்படுத்தப்படுகின்ற அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை செயல்திட்டத்தின் மூலமாக மத்திய மாகாணத்தில் தேசிய பாடசாலைகள் 47 லும் மத்திய மாகாண பாடசாலை 901 அடங்கலாக 948 பாடசாலைகளின் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவது எமக்கு பாரிய பலம் என்று சொல்ல முடியும். இதன்கீழ் 2996 செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தி வருகின்ற வேளையிலே அதற்காக ரூபா மி. 6,605 ஒதுக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தை போல நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒரு கருவியாக கல்வி பகுதியின் அபிவிருத்திக்காக அடுத்த வருடத்தில் மத்திய அரசின் பங்களிப்பையும் ஏற்றுக்கொள்ளும் அதேவேளை மாகாண சபையின் வரவுசெலவு திட்டத்தின் மூலம் 240 ரூ.மி ஒதுக்கீடுசெய்வதற்கு முன்மொழிகின்றேன்.

காணி அபிவிருத்தி

கௌரவ தலைவர் அமைச்சர்

மத்திய மாகாணத்திற்குள் அமைந்திருக்கும் சகல அரச காணிகளையும் அத்தோடு இணைந்த சொத்துக்களையும் பொறுப்பேற்று அவற்றை மக்கள் மேன்மைக்காக பயன்படுத்துகின்ற பொழுது பொருளாதார சமூக சுற்றுச்சூழல் என்பவற்றை அவதானித்து சரியான முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

காணி குறைபாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பவற்றை கவனத்தில் கொண்டு காணியற்ற மக்களுக்கு காணி பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வது முக்கிய காரணமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி மக்கள் குடியிருப்பு காணி அபிவிருத்தி காணி கையேற்பு ஆகிய செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மற்றும் மக்கள் குடியிருப்பு வீதி அபிவிருத்தி மண் பாதுகாப்பு மற்றும் பொருளாதார பண்டங்களின் உற்பத்திக்கு ஊக்கமளித்தல் போன்றன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தேவைக்கு ஏற்ப காணிகள் கையேற்றல் அரசுக்கு சொந்தமான காணிகளை அளந்து பிரச்சினை தீர்ப்பது அத்தியாவசிய தேவையாக சொல்ல வேண்டும். அதுபோலவே மாகாணத்திற்கு இலாபத்தை காணி குத்தகை ஆதாயமாக ரூபா மி. 56 அண்மித்த தொகை 2011 ஆண்டு 3ஆவது காலாண்டில் பெற்றுக்கொள்ள முடிந்தது. இதுபோலவே இந்த செயற்பாட்டை தொடர்ச்சியாக உயர்ச்சி பெறுவதற்காக 2017ஆம் வருடத்திலே ரூபா மி. 6.0 ஒதுக்கிக் கொடுப்பதற்கு முன்மொழிவு செய்கின்றேன்.

<u>உள்ளூராட்சி</u>

மத்திய நாட்டின் மக்களின் நலன்புரிக்காக உள்ளூராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்களையும் அதன் நோக்கங்களை பலனுள்ள வகையில் நடைமுறைபடுத்துவதற்கு இயன்ற வகையிலே நட்பு ரீதியான வழிகாட்டல் வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், உதவி செய்தல் என்பவற்றின் மூலமாக நல்லாட்சியின் உள்ள (திறமையான) வெற்றிகரமான

உள்ளூராட்சி பிரிவொன்றை மத்திய மாகாணத்தினுள் 2016ஆம் வருடத்திலே ஏற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் விசாலமானதாகும்.

2016ஆம் வருடத்தில் உள்ளூராட்சி சபைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு .246 மி ரூபா ஆகும். இதன்கீழ் இந்த வருடத்திற்குள் உள்ளூராட்சி சபைகளின் வேலைத்திட்டங்கள் 211 நடைமுறைபடுத்தல் பாரிய கழிவு முகாமைத்துவம் செயல்திட்டத்தின் மூலமாக (அகற்ற) அப்புறபடுத்துவதற்காக கம்பெக்டர் இயந்திரங்களை பெற்றுக்கொடுத்தல். மீள் சுழற்சி பொருட்களை சேகரிக்கும் மத்திய நிலையங்களை ஆரம்பித்தல். கொம்போஸ்ட் பிரிவை ஆரம்பித்தல் புதுப்பித்தல். ஜீவ இரசாயன உரப்பிரிவு. வீடுகளுக்கு ஜீவ இரசாயன உர கலன்களை பெற்றுக்கொடுத்தல். விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை நடாத்துதல், விழிப்பூட்டும் விளம்பர பலகைகளை தயாரித்தல் ஆகியன அடங்கும். இதற்கு மேலதிகமாக பொதுச்சந்தைகளை புதுப்பித்தலும் பராமரித்தலும் கிழமை சந்தை புதுபித்தலும் முறைப்படுத்தலும் தகன கருவிகளும் மயான பூங்காக்களை புதுப்பித்தலும் பொது மலசலகூடங்களை புதுப்பித்தலும் பராமரித்தலும். ஆயர்வேத வைத்திசாலைகளில் அத்தியாவசிய தேவைகளை பராமரித்தலும் புதுப்பித்தலும் பொது மலசலக்கூடங்களை பராமரித்தல்

முன்பள்ளிகளையும் சிறுவர் பூங்காக்களினதும் அடிப்படை வசதிகள் அபிவிருத்தியை ஏற்படுத்தப்பட்டது. மகாவலியினால் கையேற்கப்பட்ட சொத்துக்களை பராமரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 51 செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் கிராமிய மக்கள் நீர் விநியோக அபிவிருத்திக்காக ரூபா மி .50 செலவிடப்படுகின்ற அதேவேளை அங்கு செயல்படாத நீர் வேலைத்திடட்ங்களை மீண்டும் செயல்பட வைத்தல். நடைமுறையில் உள்ள நீர் திட்ட அபிவிருத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பு வேலைத்திட்ங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அரச அதிகாரிகள் மக்கள் அமைப்புக்களின் அதிகாரிகளுக்கு பயிற்சி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலமாக பிரதேச சபைகள் வலுப்படுத்தப்படுவதன் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைய மத்திய மாகாணத்திற்குள் 245

வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதோடு அதற்காக 87 மி. ரூபா கிடைத்துள்ளது.

இதனால் உள்ளூராட்சி நிறுவனங்களின் அத்தியாவசிய (மக்களின்) அடிப்படை தேவைகள் மேம்பாட்டிற்காக தேவையான உதவிகளை வழங்குதல் இதன்மூலமாக மக்களுக்கு வழங்குகின்ற சேவைகளின் குணநல விருத்தியையும் வினைத்திறனையும் உயர்த்துதல் எமது நோக்கமாகும். இதன்கீழ் ஒரு பிரதேச சபைக்கு 6.0 மி. ரூபா வீதம் கொடுக்கப்படுகின்றது. மேலும் உள்ளூராட்சி சபை நிறுவனங்களின் அடிப்படை வசதி அபிவிருத்திக்காக மூலதன வேலைத்திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தில் இதுவரை 155மி. ரூபா கிடைத்துள்ளது.

நகர மயமாக்கல் மூலமாக மக்களின் தேவைகள் உயர்வடைவதன் மூலமாக மக்கள் தேவைக்கேற்ப வசதிகள் செய்துகொடுப்பதற்கு தேவையான வேலைத்திட்டங்களுக்காக உள்ளூராட்சி சபைகளின் பிரிவுகளுக்கு ஏற்றவாறு வடிகால் அமைப்பு, உள்வீதிகள், நாட்சந்தை, கிழமைச்சந்தை, நீர் வழங்கள் ஆகிய மக்களின் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் புதிதாக நிர்மாணிப்பதற்கு தேவையான உதவிகள் வழங்கப்படுகின்றது.

இதற்காக ஒரு உள்ளூராட்சி சபைக்கு 40 மி. ரூபா பெற்றுக்கொடுக்கின்ற அதேவேளை உள்ளூராட்சி சபைகள் 43னுள் இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவியின் மூலமாக நகர எழுச்சி வேலைத்திட்டம் இந்த வருடத்திலும் உள்ளூராட்சி சபைகள் 23 இல் 41 திட்டங்களுக்காக 1185 மி. ரூபா செலவிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளை தேவைகளை நடைமுறைப்படுத்திக்கொண்டு அத்தோடு மாகாண மக்களின் அன்றாட செயற்பாடுகள் இலகுபடுத்தி கொள்வதில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டையும் பார்க்கும் போது எதிர்வரும் வருடத்திற்கு எதிர்பார்க்கும் வேளையில் மாகாணசபையின் வரவு செலவு 2017ஆம் வருடத்திற்காக 70 மி. ரூபா ஒதுக்கித்தருமாறு முன்மொழிகிறேன்.

முன்பிள்ளை பருவ அபிவிருத்தி

முன்பிள்ளை பருவ குழந்தைகளின் உரிமைகளை பாதுகாத்தல், உடல், உள ரீதியாக குழந்தைகளை ஸ்தீரப்படுத்தலும் அதற்காக முன்பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்கள் தரத்திற்கேற்ற வகையிலே நடைமுறைப்படுத்த தேவையான முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது. அதை கண்காணித்தலும் மேற்பார்வை செய்தலும் மூலமாக குழந்தை பருவம் முறையாக அதன் தரத்திற்கேற்ப அபிவிருத்தி செய்து முறையான பாடசாலை கல்விக்காக தகுந்த வகையிலே குழந்தைகளை மத்திய நாட்டின் உருவாக்குவது எமது பிரதான நோக்காகும். இதற்காக முன்கல்வி பருவத்தின் வளர்ச்சிக்காக ஒரு அலகின் மூலமாக ஆரம்ப செயற்பாடுகள் 2016இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டு அறிக்கையின் படி மத்திய மாகாணத்திற்குள் முன்கல்வி பருவ மத்திய நிலையங்கள் 2425 நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 2016 ஆம் வருடத்தில் (உபான) அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் மூலமாக 5.0 மி. ரூபா கிடைத்துள்ளது. யுனிசெப் வேலைத்திட்டத்தின் மூலம் 4.2 மி. ரூபாவும் முதலீடு செய்யப்பட்டு பிரதான செயல்திட்டம் 14 செயல்படுத்தப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தை மேலும் முன்னேற்றி நடைமுறைப்படுத்துவதற்கு 2017 ஆம் வுருடத்திற்கு 3.0 மி. ரூபா ஒதுக்கித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கலாசார செயற்பாட்டு அபிவிருத்தி

கலாசார கலை பாரம்பரிய உரிமைகள் பாதுகாக்கின்ற சந்ததியினரை ∴ தலைமுறையினரை உருவாக்குவதற்காக இந்த வருடத்தினுள் மத்திய மாகாணத்தினுள் பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கலாசார சமய நிகழ்ச்சிகளுக்காக விசேட பங்களிப்பு கொடுத்து செயற்படுத்துவதன் மூலமாக இந்த வேலைத்திட்டம் 2016ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 8.0 மி. ரூபா ஆகும்.

இதன் அடிப்படையில் மக்கள் கலைகள் பாதுகாப்பு, மக்கள் படைப்புகள், மக்கள் இலக்கிய படைப்புகள் மக்களது எழுத்து, மக்களது வாசிப்பு திறன்களை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மேலும் கலைக்கல்லூரிகள் அபிவிருத்தி கலைக்கல்லூரி தலைவர்கள் பயிற்சி மத்திய மாகாண அரச நடனக் குழுக்கள் அபிவிருத்தி செய்தல், கலாரசனை பண்பாட்டு வளர்ச்சிக்கு வேலைத்திட்டங்களை அறநெறி பாடசாலை மாணவர்களது திறமை வெளிப்பாட்டு செயற்பாடுகள் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்து, இஸ்லாம் கலாசார வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அது போலவே மத்திய மாகாணத்தின் சகல கலைஞர்களதும் திறமைகளை பாராட்டும் முகமாக மதிப்பதற்காக மத்திய மாகாண கலை கலாசார விழா குழு நாடகங்களையும் குருந்திரைப்படங்கள், குழந்தை நடனவிழா, சித்திர போட்டிகள் என்பன சிரேஷ்ட கலைஞர்களின் கௌரவ பாராட்டு விழாக்களும் நடைபெறுகின்றது. இந்த செயல்பாடு தொடர்ச்சியாக நடைபெறுவதோடு எதிர்ப்பார்க்கும் இலக்கையும் வெற்றியையும் அடைவதற்கு 2017 8.0 மி. ரூபா பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலாதுறை வளர்ச்சி

சுற்றாடல், கலாசார பெறுமதி மிக்க, சுற்றுலா கைத்தொழில் பெறுமதி மிக்க கவர்ச்சியான இடங்களை இனங்கண்டு அதற்கான அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலமாக உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக மிகவும் விருப்பத்திற்குரிய வசதிகளை வழங்குவதும் கவர்ச்சிகரமான அந்த இடத்தை பிரபல்யப்படுத்த இந்த வருடத்தில் பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

கவர்ச்சிகரமான இடங்களின் அடிப்படை வசதிகள் அபிவிருத்தியின் கீழ் 15 இடங்களுக்காக 55.0 மி. ரூபா முதலீடு செய்து அபிவிருத்தி செய்யப்பட்டது. மேலும் சுற்றுலா துறைக்கு ஏற்ற பிரெஞ், ஜேர்மன், கொரியன் மற்றும் சீன மொழிகள் பயிற்சிநெறி நடாத்துதல், சுற்றுலா வழிகாட்டிகளுக்கு பயிற்சியளித்தல், பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை சுற்றுலா

குழுக்களை தயாரித்து சுற்றுலா தளங்கள் சம்மந்தமான அறிவூட்டல் சுற்றுலா துறை சம்மந்தமான திட்டங்களில் அவர்களின் திறமைகளை வளர்ப்பதற்காக வேலைத்திட்டங்கள் தயாரித்தல், மேலும் சுற்றுலா துறை வளர்ச்சிக்காக மத்திய மாகாணத்தின் சுற்றுலா இணையத்தளத்தை மேம்படுத்துதல், சுற்றுலா தகவல் மையத்தின் வசதிகள் அபிவிருத்தி மற்றும் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதுபோலவே வருடாந்தம் சிறப்பான விழாவாக உலக சுற்றுலா தினம் கண்டி தளதா பெரகரவுக்கு சமாந்தரமாக ஏளைவை முயனெல (இணையாக) கலாசார நிகழ்வுகள், வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக நடாத்தப்பட்டு வருகின்றது. மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலமாக நுவரெலியா கிரகரி வாவி அருகாமையில் சுற்றுலா பயணிகளை கவர்ந்து இழுக்கும் இடங்களை மேம்படுத்தல் அடங்கலாக 5 செயற்றிட்டங்களுக்கு 119 மி. ரூபா பெற்றுக்கொள்ள முடிந்தது சந்தோசத்திற்குரிய காரணமாகும்.

மேலும் பாடசாலை விட்டு விலகும் மாணவர்களுக்கு சுற்றுலா முகாமைத்துவ பயிற்சி நெறிகளுக்காக 3.6 மி ரூபா மத்திய அரசின் மூலமாக பெற்றுக்கொண்டு தேவையான வேலைத்திட்டங்கள் செய்யப்பட்டுள்ளது. தற்போது மாகாணத்தில் தொழில் உருவாகுதலுக்கும் நிதி வருவாய்க்கும் அதி விசேட பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு இயன்ற சுற்றுலா துறை வளர்ச்சிக்காக 2017ஆம் வருடம் 20.0 மி. ரூபா ஒதுக்கித்தருமாறு முன்மொழிகிறேன்.

<u>நூலக அபிவிருத்தி</u>

அறிவு மற்றும் தகவல்கள் சுகந்திரமாகவும் தொடர்ச்சியாகவும் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்காக 2016 ஆம் வருடத்தில் நூலக சேவை சபை மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களுக்கிடையே பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள் முன்னுரிமை பெறும். அதன் போது

மொழிப் பாசறைகள் இலக்கிய இரசனை கவியரங்கு என்பவற்றை நூலக அதிபதிகளின் (அதிகாரிகளின்) தொழிற்பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் நூலக சங்கத்தின் கற்கைநெறி போன்றவற்றை செயற்படுத்தல் முதன்மைப்பெறும்.

2016 ஆம் வருடத்தில் நூலக புத்தகங்களை கொள்வனவு செய்வதற்காக 1.0 மி.ரூபாவும் நூலக சேவையின் செயற்குழு கட்டிட புனர்நிர்மாணத்திற்காக ரூபா மி.3.5 ஒதுக்கப்பட்டுள்ளது. அதுபோல நூலக சேவைகள் செயற்குழுவினூடாக நூலகத்திற்கான தரமுடைய அச்சிடப்பட்ட உபகரணங்கள் மற்றும் மரத்தளபாட கொள்வனவு, விரிவுரை மண்டபத்தை வாடகைக்கு விடல், பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் நூலக அங்கத்துவத்தை வழங்குவதன்மூலம் ரூபா 4 லட்சத்திற்கு அதிகமான பணம் வருமானமாக பெறப்பட்டுள்ளது. எதிர்ப்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அந்தந்த காரியங்களுக்காக 2017ஆம் வருடத்திற்கான ரூபா மி. 1.0 ஒதுக்குவதற்கு யோசனை முன்வைக்கிறேன்.

<u>கூட்டுறவு நிலைய அபிவிருத்தி</u>

கூட்டுறவு அமைப்புகளில் நல்லொழுங்குகளை தாபிப்பதற்காக வளவாளர் உபதேசனையாளர், உதவுபவராக செயற்பட்டு, நல்லொழுக்குடைய கூட்டுறவு முறையை மத்திய மாகாணத்தில் தாபிப்பதற்காக 2016ஆம் ஆண்டு கூட்டுறவு திணைக்களம் செயற்பாடுகளை மேற்கொண்டது. மத்திய மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட அடிப்படை கூட்டுறவு சங்கங்கள் 1,681 ஆவதுடன் இடைநிலை சங்கங்களின் கீழ் மாவட்ட கூட்டுறவு சங்கங்கள் 03ம், சனச சங்கம் 06ம், நுகர்வோர் கூட்டுறவு சங்கம் 01ம் (கண்டி), கூட்டுறவு கிராமிய வங்கி 01ம்(கண்டி) செயற்படுகின்றது. மத்திய மாகாணத்தினுள் செயற்பட்டுவரும் சங்கங்களுக்கு உரிமையான சொத்துக்களை கருத்தில் கொள்ளும்போது அடிப்படை சங்கங்கள் கொண்டுள்ள நிலையான மற்றும் செல்லிட சொத்துக்களின் பெறுமதி ரூபா மி.18,000 அதிகமாகும். இடைநிலை சங்கங்கள் கொண்டுள்ள நிலையான மற்றும் செல்லிட சங்கங்களின் பெறுமதி ரூபா மி.390 ஆகும்.

2016ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் திணைக்களத்தின் அடிப்படை வசதிகளின் அபிவிருத்தி மற்றும் பல்லேகல கம்உதாவ பூமியில் அமைந்துள்ள கல்வி மற்றும் பயிற்சி மத்திய நிலையத்திற்குரிய விடுதி நிர்மான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக கூட்டுறவு நிதியினை பயன்படுத்தி பல்லேகல கம்உதாவ பூமியில் அமைந்துள்ள கல்வி மற்றும் பயிற்சி மத்திய நிலையத்தின் விடுதி நிர்மானிப்புக்காக ரூபா மி.6.0ம் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் கூட்டுறவு சங்க அதிகாரிகள், அரச அதிகாரிகளை பயிற்றுவிப்பதற்காக ரூபா மி. 1.0 பயன்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள கிராமிய வங்கிகளின் நவீனமயப்படுத்தலுக்காக பிரதான அமைச்சு மூலமாக வங்கிக் கிளைகள் வசதிக்காக ரூபா மி. 10.0 அளவிலான நிதி பெற்றுக்கொள்ள முடிந்தது. அடிப்படை மற்றும் மாவட்ட சங்கங்களின் நிதியின் கீழ் மாகாணத்தில் குறித்த துறையை அபிவிருத்தி செய்வதற்கான பாரிய செயற்பாடுகளை செயற்படுத்துவது நடைமுறை தேவையாக உள்ளதை காண்பிப்பதுடன் 2017ஆம் ஆண்டில் கூட்டுறவு அபிவிருத்திக்காக ரூபா மி.3.0ஐ ஒதுக்குவதற்கு யோசனை முன்வைக்கிறேன்.

<u>சுகாதார சேவை மேம்பாடு</u>

மத்திய மாகாண மக்களின் உடல் உள சமூக மற்றும் கல்வி சம வாழ்வை கொண்டு செல்வதுடன் மாகாணத்தில் சுகாதார நிலைமையை உயர்மட்டத்திற்கு கொண்டு செல்லும் திடசங்கட்பத்துடன் நோய் நிவாரண மற்றும் நோய் பரிகார சேவையை செயற்படுத்தப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டு சுகாதார சேவையை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக பல்வேறு மூலாதாரங்களின் கீழ் ரூபா மி. 220 அளவிலான நிதி ஒதுக்கப்பட்டது. அதன்கீழ் நோய் பரிகார மற்றும் நிவாரண துறைகளின் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி, வாட், வெளிநோயாளர் பிரிவு மற்றும் ஏனையை சேவைகளை மேம்படுத்துவதற்காக, வைத்திய மற்றும் வைத்தியமல்லாத உபகரணங்களை கொள்வனவு செய்வதும் மற்றும் சுகாதார சேவையாளர்களுக்காக விடுதி வசதிகள் அபிவிருத்தி மற்றும் சுகாதார துறையில் மனிதவள

அபிவிருத்திக்காக வேலைத்திட்டங்கள் செயற்படுத்துவதினூடாக தரத்தில் உயர்ந்த சுகாதார சேவையை மக்களுக்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த வருடத்தில் பிரதேச சுகாதார சேவை வலுப்படுத்துவதற்கு யப்பான் வெளிநாட்டு உதவி ஏஜன்சி உதவியின் கீழ் தேசிய நிதி மூலம் கட்டபட்ட தெல்தெனிய மாவட்ட தலைமை வைத்தியசாலை டிசம்பர் மாதமளவில் மாகாணத்தின் மக்களுக்கு சேவை வழங்குவதற்காக மக்களுக்கு கையளிக்க தீர்மாணிக்கப்பட்டது அதே போல மாத்தளை மாவட்டத்தில் ஏற்படுகின்ற சிறுநீரக நோயிக்கு வினைத்திறனான சேவை வழங்குவதற்காக தம்புளை மாவட்ட தலைமை வைத்தியசாலையில் கட்டப்படுகின்ற ஆய்வு கூடம் மக்களுக்கு கையளிக்க படவுள்ளது. அத்தோடு சிறுநீரக நோய் தடுப்பிற்கு வில்கமுவ பிரதேசத்தின் வைத்தியசாலையில் இராசாயன ஆய்வு கூட வசதிகளை மேம்படுத்துவதற்கு இந்த வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணித் தாய்மாரின் இறப்பு சதவீதம் 32.2(பிறப்பு 100,000க்கு) வரையும், சிசு மரணவீதம் 9.5(பிறப்பு 100,000க்கு) வரையும், பிறப்பு நிறை குறைந்த சதவீதம் 13.4 வரையும், நீர் மூலமாக தொற்றும் செங்கண்மாரி நோயாளர்களின் எண்ணிக்கை 9.5 (சனத்தொகையில் 100,000ற்கு) வரையும், தடுப்பூசி வேலைத்திட்டத்தை பலப்படுத்துவதினூடாக சின்னமுத்து நோயாளர்களின் எண்ணிக்கை 4.4 (சனத்தொகையில் 100,000ற்கு) வரையும், நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை சூனிய மட்டம் வரைக்கும் குறைக்கக்கூடியதாக இருந்தமை மாகாண சுகாதார பிரிவு பெற்ற பெரும் வெற்றியாகும்.

நோய்வாய்களை தவிர்த்துக்கொள்வதற்கு பழக்கப்பட்ட சமூகத்தின் மூலமாக நோய் தவிர்ப்பு நடவடிக்கைகளை ஸ்தீரப்படுத்தல் அதிஉயர் தரத்திற்கு சமாந்தரமாக மக்கள் நலன் விரும்பும் சுகாதார சேவை ஒன்றை உருவாக்குவதற்கும் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ள தோட்டப் பிரதேச சேவையை மேம்பாடடைய செய்தல், உடல் உள ரீதியாக நலிவடைந்துள்ள நோயாளர்களை மீண்டெழச் செய்தல், தற்போது

பரவிக்கொண்டு வருகின்ற சிறுநீரக நோய்த்தன்மையை குறைந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு சுகாதார வசதிகள் அமைந்த பாதுகாப்பு சேவை மையத்தை நிர்மானித்தல் ஆகிய முன்னுரிமை வழங்குவதற்காக சுகாதார பிரிவின் மிகுந்த கவனத்திற்கு கொண்டுவரவேண்டியுள்ளது.

மாகாண மக்களின் உடல் ஆரோக்கியம் நல்ல முறையில் அமைவதை ஸ்தீரப்படுத்திக் கொள்வதற்கு தேவையான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு 2017ஆம் வருடத்திற்காக 275.0 மி. ரூபா ஒதுக்கித்தருமாறு முன்மொழியும் அதேவேளை உலக வங்கியின் நிதி உதவியின் மூலமாக 360.0 மி. ரூபா எதிர்ப்பார்க்கிறேன்.

<u>ஆயர்வேத செயற்பாட்டு அபிவிருத்தி</u>

மத்திய மாகாணத்தினுள் சுகாதார மேம்பாடு மிக்க மக்கள் கூட்டத்தை உருவாக்குவதற்காக ஆயர்வேத அறிவை மேம்பாடடையச் செய்து செயற்பாட்டு ரீதியாக ஈடுபடுத்தி நிவாரனம் மற்றும் சிகிச்சையும் பிரிவு ஒன்றை ஆரம்பித்து மாகாணத்தினுள் அமைப்பதற்காக 2016ஆம் வருடத்தில் 121மி. ரூபாவிற்கான நிதி ஒதுக்கீடு செய்து வேலைத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது.

அதில் பாரம்பரிய வைத்திய முறையை பாதுகாத்தல், மீள் வளர்ச்சியடையச்செய்தல், மூலிகை, பூங்கா, மூலிகை தயாரிப்பு தர மேம்பாடு அடைவதற்காக உயர் தரத்தில் பெற்றுக் கொள்வதன்மூலமாக மாகாணத்திற்கு தேவையான மூலிகைகளை மாகாணத்திற்குள்ளே தயாரித்துக் கொள்கின்ற செயற்பாட்டை ஸ்தீரப்படுத்திக்கொள்ளல் ஆயர்வேத மக்கள் சுகாதார சேவையை விரிவுபடுத்தல், உள்நாட்டு வெளிநாட்டு பாரம்பரிய வைத்திய அறிவை பகிர்ந்து கொள்வதன் மூலமாக மத்திய மாகாண மக்களுக்கு மிகவும் உயர் தரத்திலான சுகாதார சேவையை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் ஆயர்வேத மக்கள் மயப்படுத்தப்பட்ட சேவையை விரிவுபடுத்துவதற்கும் அரச மற்றும் தனியார், மக்கள் பங்களிப்புடன் ஆயர்வேத சமூக சேவையை விரிவுபடுத்துவதற்கும் உள்நாட்டு வெளிநாட்டு

சுற்றுலா துறையை இலக்காகக் கொண்டு நவீன தேவைகளுக்கு ஏற்ற வகையிலே தயாரிக்கப்பட்ட ஆயர்வேத வேலைதிட்டத்தை நடைமுறை படுத்துவதில் நமது கவனத்தை செலுத்த வேண்டியுள்ளது. இந்த செயற்பாட்டை மேலோங்க செய்வதற்காக 2017ம் வருடத்திற்காக 46மி. ரூபா ஒதுக்கித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>சிறுவர் நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு</u>

பெற்றோர்களது அரவணைப்பு பாதுகாப்பு இல்லாது பாதிக்கப்பட்ட ஆண், பெண் குழந்தைகளுக்கு ஏற்ற பாதுகாப்பும் ஏற்ற கல்வியும் பெற்றுக்கொடுப்பதன் மூலமாக அவர்களை சிறந்த பிரஜைகளாக சமூகமயப்படுத்தல் எமது பொறுப்பும் கடமையும் ஆகும். பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகளைப் போல பல்வேறு துஂபிரயோகங்களுக்கு ஆளாக்கப்பட்டு நீதிமன்றத்தினால் நன்னடத்தை பாதுகாப்பு மையங்களுக்கு கையளிக்கப்படுகின்ற குழந்தைகள் தொடர்பாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சிறுவர் நன்னடத்தை காரியாலயம், அரச சிறுவர் நிலையம், பாதுகாப்பு மையங்கள் அதேபோலவே தன்னார்வு சிறுவர் இல்லங்கள் மாகாணத்தினுள் நடத்தப்பட்டு வருகின்றது. மத்திய மாகாணத்தினுள் 10 நன்நடத்தை காரியாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ‘‘குழந்தைகள் நிழல்’’ (டிக்கிரி செவன), அரசு கையேற்கும் சிறுவர் இல்லம் மற்றும் வேறலவத்த சிறுவர் தங்கும் இல்லம் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் நடைபெறுகின்ற அதேவேளை தன்னார்வு குழந்தை இல்லங்கள் 36வுடன் விசேட தேவையுடைய குழந்தைகள் விடுதி 4 உம் திணைக்களத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்பட்டு வருகிறது.

இவ்வாறு பெற்றோரின் அன்பும் ஆதரவும் பராமரிப்பும் இழக்கப்பட்ட குழந்தைகளை பராமரித்து அவர்களை சமூகம் ஏற்ற பிரஜைகளாக மாற்றி சமூக மயமாக்குதல் என்பது இலகுவான காரியமல்ல என்பதை கூறியே ஆகவேண்டும். இந்த செயற்பாட்டிற்காக அரச பிரிவுக்கும் மேலதிமாக நிதிமூலதனம் பெற்றுக்கொள்வதற்கு கவனம் செலுத்தவேண்டியது மிக முக்கியமாகும். மக்கள் கவனத்தை தன்பால் ஈர்க்கவேண்டிய சிறுவர்

நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு செயல்பாட்டிற்காக 2017ஆம் வருடத்திற்காக 7.0 மி. ரூபா ஒதுக்கிக்கொள்வதற்கு முன்மொழிவு செய்கிறேன்.

சமூக சேவை செயற்பாடுகள்

குடும்பங்களில் முறையான பாதுகாப்பு இல்லாது வயோதிப நிலை அடைதலை போல, அங்கவீனம் அடைந்து அனாதையாக்கப்பட்ட முதியோரை பாதுகாப்பதற்கான தேவையான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது எமது பொறுப்பாகும். விசேடமாக முதியோர் சனத்தொகை ஏனெனில் 60 வயது அதற்கு மேல் கூடியவர்களின் தொகை வேகமாக வளர்ந்துவரும் பின்னனியில் அவர்கள் சமூகத்திற்கு பாரமாக அமைந்துவிடாது அவர்களது குடும்ப சூழலிலே அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு செயற்பட வேண்டியுள்ளது. அவ்வாறு தற்போது மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்தி வருகின்ற முதியோர் இல்லங்கள் 17 சேவைகளை மேலும் தனியார் உதவி உபகாரங்களின் கீழ் மேலும் உயர்த்தி கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அதற்கு மேலதிகமாக மாகாணம் முழுவதும் பரந்துபட்டு இருக்கின்ற தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மக்கள் நன்கொடை நோய்நொடி மற்றும் அங்கவீனர்களுக்கான உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல் ஆகிய செயற்பாடுகள் சமூக சேவையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு 2017இல் 6.0 மி. ரூபா ஒதுக்கித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய அபிவிருத்தி

கௌரவ தலைவர் அவர்களே

தேசிய உணவு உற்பத்தி செயல்திட்டத்திற்கு இணையாக மத்திய மாகாணத்தினுள் நச்சு தன்மையற்ற உணவு பண்டங்களை தயாரித்து மக்களது போசனை தரத்தை மேலோங்க செய்தலும் மூலமாக மாகாணத்தினுள் தொற்றா நோய்களை தவிர்த்துக் கொள்ளுதலும் விவசாய அபிவிருத்தியின் போது எமது பிரதான எதிர்ப்பார்ப்பாகும். மத்திய மாகாணத்தின் விவசாய புலத்தை மிகுந்த பெறுமதியான ஒன்றாக விளங்க வைக்கின்ற பெரிய வெங்காய உற்பத்தி விதை உருளைக்கிழங்கு உற்பத்தியும், விதை போஞ்சி, உற்பத்தி கிடைப்பது அதிவிசேட இடத்தை பெற்றுக்கொடுக்கின்றது.

2016ஆம் வருடத்தில் 17.4மி. ரூபா பெரிய வெங்காய உற்பத்தி ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளை தேசிய ரீதியாக பெரிய வெங்காயம் நாட்டின் தேவையில் 50மூதை மத்திய மாகாணத்திற்கு பெற்றுக்கொடுத்து விதை கிலோகிராம் 20இ000 தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இது 2017ஆம் வருடத்தில் விதை 22இ000 கிலோகிராமாக இலக்காக உயர்த்திக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. விதை உருளைக்கிழங்கு தயாரிப்பு 2016ஆம் வருடத்தில் 8இ000 மொத்த தொன்னாக இருக்கின்ற அதேவேளை முன்வரும் காலங்களில் தேசிய விதை தேவையின் 60மூ வரை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தரமான போஞ்சி விதை உற்பத்தி செய்து விதை இறக்குமதி செய்வதை குறைத்து தேசிய விதையின் தரத்தை உயர்த்துதலோடு விதை இறக்குமதிக்காக அந்நிய செலாவானி மீதப்படுத்தி கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள இந்த செயல்திட்டத்தில் மத்திய மாகாணத்திற்கு பொருத்தமான உற்பத்தியாக்கும் செயல்திட்டமாகும்.

தேசிய விதை உற்பத்தியின் தேவை 375,000 கிலோகிராம் வரையாக உற்றபோதும் இது வினியோகிக்கப்படுவது நுவரெலியா மாவட்டத்திலிருந்து என்ற சொல்லப்படுவது மாகாணத்தின் கிடைத்த மிக உயர்ந்த கௌரவமாகும்.

இந்த பங்களிப்பு 2017ஆம் ஆண்டளவில் 55% வரை உயர்த்தி கொள்வதே எமது இலக்காகும். இந்த விதை உற்பத்தி செயல்திட்டத்திற்கு மேலதிகமாக உற்பத்தியும் வினைத்திறன் அதிகரித்து கொள்வதன் கீழ் மலர் மற்றும்

பழவர்க்க விதை பாத்திகள் ஏற்படுத்தல், காபனிக் உர உற்பத்தி, நகரப்பூங்கா அபிவிருத்தி மற்றும் தோட்ட பிரிவின் வீட்டுத்தோட்டம் வளர்ச்சியடைந்து உற்பத்தி அபிவிருத்தி மிளகாய், சோளம், பயறு, குரக்கன், சின்ன வெங்காயம் ஆகிய பயிர்களின் உற்பத்தியை மேலோங்கச்செய்தல் விவசாய கிணறுகள், கட்டுகள் நிர்மானித்தல் மற்றும் விசேடமாக தோட்டத்தில் வாழும் மக்களது போசனை தரத்தை அதிகரித்தல் விவசாய அபிவிருத்தி விசேட கவனம் செலுத்த வேண்டிய ஒரு பிரிவாகும்.

சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளருக்காக வசதிகள் செய்து கொடுத்தல், விவசாய உற்பத்தி துறையை மேலோங்கச் செய்வதற்கும் பெறுமதிசேர் வரி(ஏயடரந யனனநன ைனைரளவசநைள) பெறுமதி செலுத்திய உற்பத்தி துறையாக மாற்றுதல். உற்பத்தி மேற்கொள்ளப்படாத வயல் நிலங்களை ஏனைய உற்பத்திக்காக பயன்படுத்தல் ஆகிய பல வேலைத்திட்டங்கள் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி மற்றும் சமூகவள அபிவிருத்தி ஆகிய வேலைத்திட்டங்கள் எமது பிரதேசத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

விவசாய போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலமாக மாகாணத்தினுள் விவசாய உற்பத்தி செலவுகளை குறைத்துக்கொள்வதற்கு செயல்படுகின்ற அதேவேளை 2017ஆம் வருடத்தில் விவசாய கைத்தொழில் துறைக்கு 56.0 மி. ரூபா ஒதுக்கித்தருமாறு முன்மொழிகிறேன்.

<u>சிறிய அளவிலான நீர்பாசன அபிவிருத்தி</u>

மாகாணம் முழுதும் பரந்திருக்கின்ற மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசன அபிவிருத்தி தேசிய அமைச்சினால் செயற்படுத்தப்பட்டு வருகின்ற அதேவேளை மாகாணத்தின் 03 மாவட்டங்களிலும் பரந்திருக்கின்ற சிறிய அளவிலான நீர்பாசன திட்டங்கள் புனர்த்தாரனம் செய்யும் பொறுப்பு மத்திய மாகாணத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தின் தொடர்ச்சியாக நிலைத்திருப்பதற்காக நீர்ப்பாசன முகாமைத்துவம் முறையாக பேணப்படுவதற்கு தேவையான சேவைகளையும், புதுப்பித்தலும் செய்துகொடுத்து பயிரிடப்படாத இடங்களை மீண்டும் பயிரிட

தூண்டும் வகையில் நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டங்களை செய்துகொடுக்கின்ற அதேவேளை 2017இற்காக 15மி. ரூபா பெற்றுக்கொடுக்குமாறு முன்மொழிகிறேன்.

<u>கால்நடை உற்பத்தியும் சுகாதார செயற்பாடுகளும்</u>

கால்நடை வளர்ப்பில் எமது கால்நடை வனப்பகுதியில் எமது பிரதான செயற்பாடாக விளங்குவது பாலுற்பத்தியை பெருக்குவதாகும். தற்போது தேங்காய் பால் உற்பத்தி தேவை வருடாந்தம் 900மி. லீற்றர் பாலாகும். அதில் 316மி.லீற்றர் பால் தேசிய பால் உற்பத்தி மூலமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு செயல்படுகின்ற அதேவேளை மத்திய மாகாணத்தின் பங்களிப்பானது 131.2மி.லீற்றர் பாலாகும். 2017ஆம் வருடத்தில் இதன் அளவை 150மி. வரைக்கும் அதிகரித்துக்கொள்வதற்கு இலக்காக கொள்ளப்பட்டுள்ளது. பாலுற்பத்தியோடு இணைந்த தயாரிப்புக்களை ஊக்குவித்தல், செயற்கை விந்து கட்டுதல் மூலம் பசுக்கன்றுகளை உற்பத்தி செய்தலும் வளர்த்தலும், பால் சேகரித்தல் அதை பாதுகாத்தல் செயற்பாடுகளை அளித்தல் கால்நடை வள அபிவிருத்தி புலத்தை பலனுள்ள சேவையாக ஆக்கி கால்நடை பண்ணைகளுக்காக வசதிகள் செய்துக்கொடுத்தல், விவசாயிகள் வலுப்படுத்தல், சக்திப்படுத்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பல கடந்த காலங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளது. இந்த செயற்பாடு வலுவடைய செய்வதற்காக 36.0 மி. ஒதுக்குவதற்கு நான் முன்மொழிவு செய்கிறேன்.

நன்னீர் மீன்பிடி அபிவிருத்தி

மத்திய மாகாணத்து மக்களின் போசனை தரத்தை உயர்த்தும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற நன்னீர் மீன் வளர்ப்பு திட்டம், மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து ஆற்றில் விடுதலும் மீன்பிடி

கைத்தொழிலில் ஈடுபடுபவர்களின் நலன்புரி லெங்கார மீன் உற்பத்தி வளர்ச்சி ஆகியவற்றுக்காகன செயற்பாடுகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டது. இந்த செயற்பாட்டை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த 2017இல் 2.0 மி. ரூ ஒதுக்குவதற்கு முன்மொழிவு செய்கிறேன்.

<u>சுற்றாடல் அபிவிருத்தி</u>

தேசிய சுற்றாடல் பாதுகாப்பிற்கு இணையாக மத்திய மாகாணத்தின் சுற்றாடலை பாதுகாத்துக்கொண்டு செல்வதற்கு மரக்கன்றுகள் நடும் வேலைத்திட்டம் ஒன்று கழிவு முகாமை வேலைத்திட்டம் சுற்றாடலை சுத்தம் செய்வதற்கான சிரமான வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை அதற்கான சுற்றாடல் நலன் விரும்பிகளை முன்கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 2017இல் 2மி. ரூபா நிதி ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிவு செய்கிறேன்.

இந்து கலாசார செயற்பாடுகள்

மாகாணத்தின் இந்துக்களின் சமய கலாசார செயற்பாடுகளை கவனத்தில் கொண்டு 2016ஆம் வருடத்தில் செயற்படுத்தப்பட்ட அதேவேளை 2017ஆம் வருடத்தில் அந்த செயற்பாட்டிற்கு 2.0 மி. ரூபா நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு முன்மொழிவு செய்கிறேன்.

<u>கைத்தொழில் அபிவிருத்தியும் விற்பனை வளர்ச்சியும்</u>

கௌரவ தலைவர் அவர்களே

பத்துலட்சம் தொழில் வழங்கும் வேலைத்திட்டத்திற்கு இணையாக மத்திய மாகாணத்தினுள் 2016ஆம் ஆண்டு தொழில் அற்று இருந்த 1000 இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி அளிக்கப்பட்ட அதேவேளை அவர்களை

தச்சு தொழில் வல்லுநர்கள், பொருள் உற்பத்தியாளர்கள் என்ற வகையிலே கேள்வி அதிகரித்துள்ள பகுதிகளில் அப்பொழுதும் தொழிலை பெற்றுக்கொள்வதற்கு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாய பயிற்சி, பயிற்சி நிலைய அபிவிருத்தி, குடிசைக் கைத்தொழில் வல்லுநர்களின் மாகாண தயாரிப்பு, கண்காட்சி தயாரிப்பு, வல்லுநர்களை கௌரவப்படுத்ததல், சிறு கைத்தொழில் கிராம அபிவிருத்தி விற்பனையாளரும் நுகர்வோரும் சந்திப்பதற்கான வசதி வாய்ப்புகளை 2016ஆம் ஆண்டு நாம் மேற்கொள்ள எம்மால் முடிந்தது.

அதேபோல தேசிய உற்பத்தியை ஊக்குவிக்கும் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக தொழில் பயிற்சி அளழப்பதன் மூலம் இளைஞர்கள் யுவதிகள் தொழில் திறன் வாய்ந்த முழுமையானவர்களாக தமது திறமையை பங்களிக்கும் சமூகத்திற்கு இணைத்தல்.

விவசாய அறிவை பெற்றுக்கொடுப்பதன் மூலமாக புதிய தொழிலை ஆரம்பித்தல் தற்போது செய்கின்ற தொழிலை மேலொங்க செய்ய வழிகாட்ட வேண்டியுள்ளது. மேலும் வெளிநாட்டு தொழிலுக்காக உழைப்பாளர் சமூகத்தை மேலோங்கச் செய்வதற்கு சிறு கைத்தொழில் செய்யும் குடும்பங்களின் வளர்ச்சிக்காக சிறு கைத்தொழில் அல்லாத ஏனைய சிறு மற்றும் மத்திய தர அளவிலான விவசாயிகளை மேலோங்கச் செய்தல் போன்ற செயற்பாடுகளை செய்ய வேண்டியுள்ளது. இச் செயற்பாட்டினை மேலோங்கச் செய்வதற்காக 2017இல் 9.0 மி. ரூபா ஒதுக்கிக்கொடுப்பதற்கு நான் முன்மொழிவு செய்கிறேன்.

<u>நெசவு கைத்தொழில் அபிவிருத்தி</u>

தேசிய கைத்தரி ஆடைகளை பிரபல்யப்படுத்துவதற்காக இந்த வருடத்தில் 3ஆம் காலாண்டிற்காக உற்பத்தி செய்யப்பட்ட கைத்தரி புடவையின் அளவு 115000 மீற்றர் வரையுள்ளது. அதன் பெறுமதி 45.0 ரூ மி. வரையாகும். இதுவரையும் தயாரிப்பு விற்பனை இலாபம் 48.0 ரூ மி. ரூபாவாக உள்ள அதேவேளை செப்டெம்பர் 30ஆம் திகதி வரைக்கும் கைத்தரி பெண் நெசவாளர்களுக்காக சம்பளமாக 16.0 ரூ. மி. ரூபாவுக்கு மேலான பணம் கொடுக்கப்பட்டுள்ளது.

கைத்தரி நெசவு தொழிலுக்காக மத்திய மாகாணம் முழுவதும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண் தொழிலாளர்களின் அளவு 1000ற்கு கிட்டிய தொகையாகும். விற்பனை நிலைய நவீனமயமாக்கல் விற்பனையாளர்கள் நுகர்வோருக்கான சந்திப்பை ஏற்படுத்த பெண் தொழிலாளர்களது வருமானத்தை அதிகரிக்கச் செய்தல், பயிற்சி கருத்தரங்குகள் நடாத்ததல், தொழினுட்பவியலாளர்களை ஊக்குவிப்பதற்காக திறமையை கௌரவப்படுத்தல், இயந்திர உபகரணங்களை புதுப்பித்தல், பழுதடைந்துள்ள புடவைக் கைத்தொழில் விற்பனை நிலையங்கள் தயாரிப்பு நிலையங்களை புதுப்பித்தல், மாதிரி மத்திய நிலையங்கள் 03 உருவாக்குதல் தயாரிப்புகளும் நிலையங்களுக்குமான நீர்மின் வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.

மாகாண கண்காட்சிகளை நடாத்துதல், தொழில் வல்லுநர்களை கௌரவித்தல் ஆகிய செயற்பாடுகளை இந்த வருடத்தில் நடாத்த முடிந்தது. தேசிய உற்பத்தி பாவனையை ஊக்குவிப்பதற்காக கைத்தரி புடவை உற்பத்திக்காக புதிய அறிமுகப்படுத்தல் மூலம் திணைக்களத்தின் உற்பத்தியையும் விற்பனையையும் அதிகரித்துக் கொள்வதற்கு இதன்மூலம் கைத்தொழில் இலாபத்தை உயர்த்திக் கொள்வதற்கும் பழுதடைந்துள்ள கைத்தரி நெசவு மத்திய நிலையங்களை புதுப்பித்துக் கொள்வதற்கும் புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் இனிவரும் காலங்களில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த செயற்பாட்டை மேம்பாடு அடையச்செய்து நடைமுறைப்படுத்த 2017ஆம் வருடத்திலே 5.0 மி. ரூபா ஒதுக்குமாறு முன்மொழிகிறேன்.

## இளைஞர் சேவை அபிவிருத்தி

மத்திய மாகாணத்தினுள் வாழ்கின்ற இளைஞர் யுவதிகளை ஒன்றுதிரட்டுதல், இளைஞர் செயற்பாட்டாளர்களை அணித்திரட்டுதல், இளைஞர் சமூகங்களிடையே தேசிய ஒற்றுமையை மேலோங்கச் செய்தல், தொழில் விரக்தியை குறைத்துக்கொள்வதற்காக உள்நாட்டு வெளிநாட்டு தொழில் விற்பனை நிலையங்களை இலக்காகக் கொண்டு இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சி அளித்தல், தேசிய ஒருங்கிணைப்பினை உருவாக்கிக் கொள்ள மொழியறிவை விருத்தி செய்தல், பெருந்தோட்ட இளைஞர் யுவதிகளது வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளும் வகையில் அவர்களை உருவாக்கல்

இந்த வருடத்திலே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த செயற்பாட்டினை விரிவுபடுத்துவதற்காக 2017ஆம் வருடத்தில் 40மி. ரூபா ஒதுக்கிக்கொள்ள முன்மொழிவு செய்கிறேன்.

<u>மகளிர் அபிவிருத்தி</u>

மத்திய மாகாணத்தின் மகளிர் அபிவிருத்தியின் கீழ் மகளிர் 6850 பேருக்காக வேலைத்திட்டம் ஒன்று நடைபெற்று வருகின்றது. இந்த குழுவினருக்கு அபிவிருத்தி செயற்பாடுகள் 112 நடைமுறைப்படுத்தப்பட்ட அதேவேளை தொழில்வாய்ப்பற்ற மகளிர் 2544 பேருக்கு தொழில் பயிற்சி அளித்தல். 717 பயிற்சி பெற்ற தொழிலாளருக்காக உற்பத்தி துறைகளை அதிகரித்து அரவ்களது வருமானத்தை உயர்த்திக்கொள்வதற்கு வினைத்திறன் மிக்க 3இ710 மகளிர் சக்திபெற முடிந்துள்ளது. அதேபோலவே மகளிர் ஆவோசனை சட்ட பிரச்சினைகளை தீர்த்தல், மனித உரிமை பற்றி அறிவூடஷ்டலும் நடைபெற்றுள்ளது.

மத்திய மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மகளிர் அமைப்புகளை மேலும் பலப்படுத்தி இயங்கவைத்து மகளிர் அபிவிருத்திக்காக புதிய உத்வேகத்தை பெற்றுக்கொடுத்தல். பெண்களின் பொருளாதார தொழில் நுட்ப சமூக ரீதியாக ஸ்தீரப்படுத்தல், ஆலோசனை சேவை செயற்திட்டத்திற்கு ஏற்ப சட்டம் மற்றும் உளவியல் ரீதியான அறிவுறுத்தல், போதைப்பொருள் பாவனையற்ற குடும்ப அலகை கட்டியெழுப்புதல் பற்றி அறிவுறுத்தல், சிறுவர் துஷ்பிரயோகம், மகளிர் வன்முறை என்பவற்றை குறைத்துக்கொள்வதற்காக அறிவூட்டல், மகளிர் மத்தியநிலையங்களில் அடிப்படை வசதிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட அதேவேளை இந்த செயற்பாட்டை மேலும் விஸ்தரிப்பதற்கு 2017ஆம் ஆண்டு 4.0 மி. ரூபா ஒதுக்கிக்கொள்வதற்கு நான் முன்மொழிவு செய்கிறேன்.

<u>விளையாட்டு துறை அபிவிருத்தி</u>

மத்திய மாகாணத்தின் விளையாட்டு அபிவிருத்திக்காக வருடா வருடம் நடைபெறுகின்ற தேசிய மாபெரும் விளையாட்டு விழாவுக்காக போட்டியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு மேலதிகமாக 2016ஆம் வருடத்தில் தேசிய மாபெரும் விளையாட்டு போட்டியிலே 28 தங்க பதக்கங்களையும் 38 வெள்ளி பதக்கங்களையும் 41 வெங்கல பதக்கங்களையும் மத்திய மாகாணத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டு தேசிய ரீதியாக 3 இடத்தை பெற்றுக்கொள்ள முடிந்தது. இதுபோலவே வெற்றி பெற்று மாகாணத்தின் கௌரவத்தை பாதுகாத்து கொள்வதற்கு செயற்படுகின்ற விளையாட்டு வீரர் வீராங்கனைகளை கௌரவப்படுத்துவதற்காக மாகாண விளையாட்டு பரிசளிப்பு விழா மத்திய மாகாண விளையாட்டு வீர வீராங்கனைகளுக்காக நடாத்தி அவர்களுக்கு கௌரவங்களை வழங்குவதற்கும் பிரதேச ரீதியாக விளையாட்டு வீரர் வீராங்கனைகளை கௌரவப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதுபோலவே திகன விளையாட்டு மைதானத்தை மக்களுக்காக திறப்பதற்கும் அத்தோடு விளையாட்டு திணைக்களம் திகன விளையாட்டு மைதானத்துக்கு அருகிலேயே ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுமக்களது உடல் நலனுக்காகவும் மன மகிழ்ச்சிக்காகவும் 2016 ஆம் வருடத்தில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்ட அதே வேளை அதிசிறந்த விளையாட்டு வீரர்கள் அடங்கிய குழு, விளையாட்டு கழகங்கள், மற்றும் மாவட்ட பயிற்சி நிலையங்கள் என்பவற்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. விளையாட்டு பற்றிய உணர்வை ஏற்படுத்துவதற்கும் விளையாட்டு கலாசாரத்தை மேலோங்கச் செய்வதற்கும் இரண்டாம் கட்ட விளையாட்டு வீரர் குழு ஒன்றை உருவாக்குவதற்கும் தெரிவு செய்யப்பட்ட புதிய செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு தேசிய மாபெரும் விளையாட்டு விழாவில் பதக்கங்களின் தொகையை அதிகரிப்பதை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படவேணடியுள்ளது. அது போலவே மத்திய மாகாணத்தினுள் பின்னடைவு ஏற்பட்டுள்ள விளையாட்டுக்களை தெரிவு செய்து புதிய விளையாட்டு வீரர்களின் பால் கவனத்தை திசைதிருப்ப வேண்டியுள்ளது. இதை நடைமுறைபடுத்தும் அதே வேளை கல்வித் திணைக்களமும் விளையாட்டுத் திணைக்களமும் ஒன்றிணைந்து மாகாணத்தின் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக

இனிவரும் காலங்களில் செயற்பட வேண்டும் என நான் இங்கு குறிப்பிடுகின்றேன். இதன் அடிப்படையில் 2017 ஆம் வருடத்திற்கு விளையாட்டு அபிவிருத்திக்கு 8.0 மி.ரூ ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

கிராம அபிவிருத்தி

மத்திய மாகாணத்தின் கிராமிய அபிவிருத்தி திணைக்களம் ''நிலைத்திருக்கக் கூடிய கிராம அபிவிருத்தி'' என்ற நோக்கின் படி மத்திய மாகாணத்திற்குள் கிராம மக்களின் பங்களிப்புடன் அவர்களுடைய நலன்புரிக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பல செயல்படுத்தப்பட்டுள்ளன. பிரதானமாக கிராமங்களின் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி கிராம அபிவிருத்தி மற்றும் வேலைத்திட்டமும் செயற்படுத்துவதுடன் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்வடைய செய்வதற்கு பங்களிப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ளது

இந்நாட்டின் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டம் உயர் அடைவை பெற்று கொள்வதற்கு மத்திய மாகாணம் புதிய கிராம அபிவிருத்தி சங்க யாப்பு அறிமுகம் செய்வதுடன் கிராம அபிவிருத்தி சங்கங்களை வலுப்படுத்துதல மற்றும் பிரதேச குழுக்களை உருவாக்கல் விசேட வெற்றியாகும். அதன் மூலம் மத்திய மாகாணத்துக்குள் இப்போது சிறந்த கிராம அபிவிருத்தி சங்கம் 2238 வரை அமைக்கப்பட்டுள்ளது. அதே போல் பிரதேச குழுக்கள் 36 அமைக்கப்பட்டுள்ளது. கிராமிய அபிவிருத்தி சங்க நிதி மூலம் அரசிற்கு பாரம் இல்லாது கிராம சங்கங்களின் வேலைத்திட்டம் அதி கூடிய எண்ணிக்கையில் இந்த வருடத்திற்குள் நடைமுறைபடுத்த முடிந்துள்ளது. அது போல கிராம அபிவிருத்தி திணைக்களத்திற்கு புதிய கட்டடம் ஒன்று நிர்மாணித்தல் மற்றும் கிராம அபிவிருத்தி சட்டவாக்கம் அனுமதி பெற்றுக் கொள்ளுதல் இந்த வருடத்தில் பெற்றுக்கொண்ட வெற்றியாகும்.

மேற்கூறப்பட்ட காரணங்களுக்கு அப்பால் மத்திய மாகாணத்தில் பலனுள்ள கிராமங்களை உருவாக்கல். கிராம அபிவிருத்தியை வலுப்படுத்தல்

இதறற்கேற்ப 2017 ஆம் வருடத்திற்கு 8.0 மி.ரூ ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

மாகாண வீதி அபிவிருத்தி

கௌரவ தலைவர் அவர்களே

2016 ஆம் வருடத்தில் ஒதுக்கப்பட்ட 483 மி.ரூ முதலீடு செய்து அத்தியாவசியமான 93 வீதிகள் 63 கிலோ மீற்றர் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் பாதைகளில் தார் இட்டு புணர்நிர்மானம் செய்வும் பாதையின் மதகு, வடிகான்கள் மற்றும் தடை சுவர்களும் கட்டப்பட்டுள்ளது. சாதாரணமாக பாதை பயன்பாட்டில் பாதைகளை பராமரிப்பதற்கும் அதைவிட இயற்கை அனர்த்தம் (மண்ணரிப்பு, அதிக மழை) காரணமாக வீதி அமைப்பில் செய்ய வேண்டியுள்ள அபிவிருத்தி செயற்காடுகளுக்கு வருடாந்தம் வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கபடும் தொகைக்கு அப்பால் பொது திறைசேரி உதவிகளை பெற்றுக்கொள்ள செயல்திட்ட அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது. அதே போல தேசிய ரிதியில் எதிர்பார்க்கும் உதவிகளுக்கு மாகாண வரவு செலவு திட்டத்தின் மூலம் 177.0 மி.ரூ ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

மின்சக்தி மற்றும் மாற்றுவலு சக்தி அபிவிருத்தி

மாகாணத்தில் இருக்கின்ற மாற்றுவலு மின்சத்தியை உற்சாகப்படுத்தி அதை வளர்த்து எடுப்பதன் மூலமாக தேசிய மின் உற்பத்திக்கு பங்களிப்பு செய்வதைப் போல சகலருக்கும் மின்சாரத்தை பெற்றுக்கொடுப்பது தேசிய கொள்கைக்கு கைக்கொடுப்பதன் மூலம் 2016ஆம் வருடத்தில் இந்த பிரிவின் கீழ் பலனுள்ள வேலைத்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டது.

மின்வலு வள வீன்விரயத்தை குறைப்பதன் நோக்கோடு சக்திவள பாதுகாப்பு தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு அறிவூட்டல், அரச நிறுவனங்களின் சக்திவள முகாமைசெய்வதற்கும் மாற்று வலுசக்தி பாவனை பிரபல்யபடுத்துக்கும் மற்றம் சக்திவள வினைத்திறனாக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சு கட்டட தொகுதியில் உயிர்வாயு உற்பத்தி பிரிவு மாற்றுவலு சக்தி பற்றி முன்மரிரி பிரிவுஉருவாக்குவதற்கு 4.479 மி.ரூ செலவில் அமைச்சு சுற்றாடலில் சூரியபடல் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்ட்டது. அதே போல் உலக மயமாக்கல் கஸ்ட மற்றும் வேறு சாதகமாக காரணங்களால் தேசிய மின் உற்பத்திக்கு கிடைக்கின்ற மேல் பிரதேங்களில் உள்ள குடுபங்களுக்கு மின்சாரத்தை பெற்றுகொடுக்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் நிரந்நத மின்சக்தி சபையும் அமைச்சும் இணைந்து சுற்றுச்சூழல் உலகமயமாக்கல் நிதிப் பிரிவின் நிதி உதவியை பெற்றுக்கொண்டு மின்வலு நிலையங்களின் வாயு மின்வலு உபயோகிப்பை குறைவாக பயன்படுத்தி தேசிய ரீதியிலான செயல்முறைகளுக்காக அமைக்கப்பட்ட திட்டத்தின் (NAMA) கீழ் 2016ஆம் வருடத்தில் உயிரியல் வாயு பிரிவு 100 அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பலன் வாய்ந்த மின்வலு பாவனையை ஊக்குவிப்பதற்காக இனிவரும் காலங்களில் செயற்பாடுகள் பல நடைமுறைப்படுத்த வேண்டியுள்ள அதேவேளை சூரிய மின்வலு பெற்றுக்கொடுத்தல், மாற்று மின்வலு பெற்றுக்கொடுத்தல் சம்மந்தமாக பாடசாலை மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குதல், மின்வலு பாதுகாப்பு, உற்பத்தி செய்யப்பட்ட மின்வலு அபிவிருத்தி, அரச நிறுவனங்களில் மின் வலு முகாமைத்துவம் ஆகிய வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இதன் அடிப்படையில் 2017ஆம் வருடத்திற்காக 5மி. ரூபா ஒதுக்கித்தருமாறு நான் முன்மொழிகிறேன்.

பிரயாணிகள் போக்குவரத்து சேவை அபிவிருத்தி

மாகாணத்தில் வாழும் மக்களுக்கு திருப்தியானதும் பாராட்டுதலுக்கு உள்ளாகும் வகையிலும் பிரயாணிகள் போக்குவரத்து சேவை ஒன்றை வழங்குவதற்காக 2016ஆம் ஆண்டில் மக்கள் போக்குவரத்து சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள மேலதிக செலவீடுகள் மூலம் மக்கள் அடிப்படை வசதி

அபிவிருத்தியின் கீழ் பஸ் தரிப்பு நிலையங்கள் புதுப்பித்தல், நேர அட்டவணை மேடைகள் அமைத்தல், பிரயாணிகள் தங்குமிட வசதிகள் ஆகிய வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மத்திய மாகாணத்தின் பொதுமக்கள் போக்குவரத்தின் மூலமாக திட்டமிடப்பட்ட அதிகாரப்பிரிவு ஏற்படத்துவதன் மூலம் பஸ் போக்குவரத்தை முறையானதாக ஆக்கவும், மக்கள் போக்குவரத்துக்காக திருப்தியான மக்கள் போக்குவரத்து பெற்றுக்கொடுக்கும் நோக்கிலும் சஹசர திட்டத்தின் மூலம் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் மூலம் 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்க முடிந்தது மத்திய மாகாணத்திற்கு கிடைத்த சிறப்பான வெற்றியாகும். இந்த திட்டத்தைப்பற்றி பிரயானம் செய்யும் மக்களது மேலான பாராட்டுக்கள் கிடைத்துள்ளதை ஆராய்வுகளின் மூலம் எமக்கு தரவுகள் கிடைக்கப்பெற்றது. இந்த வேலைத்திட்டத்தை மாகாணத்தினுள் மேலும் விரிவாக்குவதற்கும் போக்குவரத்து சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும் மேற்படி சேவை செயல்படுத்தப்பட வேண்டியுள்ளது. இந்த திட்டத்திற்காக 2017ஆம் வருடத்தில் 8மி. ரூபா ஒதுக்கிக்கொள்வதற்கு நான் முன்மொழிவு செய்கிறேன்.

மாகாண வீடமைப்பு திணைக்களம்.

மாகாணத்தின் மிகவும் தேவையான மக்கள் பிரிவினருக்கு வீட்டின் உரிமை பெற்றுக்கொடுத்தல், உறுதிப்படுத்துதல் ஆகியவற்றுக்காக மாகாண வீடமைப்பு திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு 2016ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 9மி. ரூபா நிதியின் மூலமாக குறைந்த ஆதாயம் பெறும் குடும்பங்களுக்கு வீடு அமைத்துக்கொள்ள பொருள் உதவிகள்,பண உததிகள் பெற்றுக்கொள்ளல், வீடு தேவையான மக்களுக்கு குறைந்த விலையில் வீடு அமைத்தல் பற்றிய அறிவூட்டல் வேலைத்திட்டங்களை நடத்துதல் ஆகிய காரியங்கள் ஆற்றுகின்ற விசேட வேலைத்திட்டமாகும். இந்த வேலைத்திட்டம் தொடர்ச்சியாக மேலோங்கச்செய்து நடைமுறைப்படுத்துவதற்காக 2017ஆம் ஆண்டு 3மி. ரூபா ஒதுக்கித்தருமாறு முன்மொழிவு செய்கிறேன்.

<u>மாகாண போக்குவரத்து சேவை அபிவிருத்தி</u>

மாகாண வாகன அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுப்பது பிரதான காரியமாக இருக்கின்ற திணைக்களம் அந்த செயல்பாட்டின் மூலமாக 2015ஆம்

ஆண்டின் மாகாணத்திற்கு உழைத்துக்கொடுத்த இலாபம் 1025மி. ரூபாவாகும். இந்த வேலைத்திட்டம் மேலும் சிறப்படையச் செய்வதற்கு சிறந்த துரிதமான சேவையை பெற்றுக்கொடுப்பதற்கும் நோக்காகக் கொண்டு மத்திய மாகாண போக்குவரத்து திணைக்களம் அடங்காக மாகாண பிரதேச செயலக காரியாலயங்கள் 36இனுள் தேவையான பிரதேச காரியாலயங்களில் மத்திய மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களுக்காக வாகன அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் வகையிலே சிறப்பு வாகன அனுமதிப்பத்திரம் வழங்கும் செயல்பாடு 2016ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. (போக்குவரத்து வாரம்) வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்ப்பார்த்த இலக்கை அடைய முடிந்த அதேவேளை இந்த செயல்பாட்டை மேலுயர்த்தி மேலும் பலனுள்ளதாக நடைமுறைப்படுத்த 2017ஆம் ஆண்டில் 2மி. ரூபா ஒதுக்கீடு செய்ய முன்மொழிவு செய்கிறேன்.

வலையத்தின் பொருளாதார அபிவிருத்தி நிறுவனம்(REDA)

மத்திய மாகாண சபையின் 2008 இலக்கம் 1 உப பிரிவின் கீழ் அமைக்கப்ட்ட வலைய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் அரச மற்றும் தனியார் பகுதிகளில் உச்ச பங்களிப்போடு பிரதேச பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு தேவையான பின்னணியை உருவாக்குவதற்கு ஏற்ற செயற்பாடுகளை நிறைவேற்றியுள்ளது. அதன் அடிப்படையில் மத்திய மாகாணத்தின் முதலீட அபிவிருத்தி வலையத்தின் சிறிய, பெரிய , மத்திய, விசால திட்டங்களின் புனருற்பத்தியோடு அரச, தனியார் ஒத்துழைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் மத்திய மாகாணத்தினுள்ளும் அதன் வெளியிலும் பல்தரப்பட்ட சேவைகளை இணைக்கும் சேவை நிலையுமாக இந்த நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. 2016ஆம் ஆண்டில் சுற்றுலா துறையின் உயர்ச்சிக்கு மேற்படி வேலைத்திட்டங்கள் சமூக பயிருற்பத்தி வேலைத்திட்டங்கள் வீதியமைப்பு திணைக்களம் இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் கண்டி கேம்ப்ரிஜ் நிறுவனம் ஆகிய வெளி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் தொழில் உருவாக்கும் வேலைத்திட்டங்கள், தேன் பூச்சி உற்பத்தி, விற்பனை ஊக்குவிப்பு, தைக்கப்பட்ட பெண்கள் ஆடை தயாரிக்கும் பயிற்சி நெறிகள், மிளகு சோஸ் திட்டம் அத்தோடு வேறு வருவாய் ஈட்டுகின்ற வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பயனாளிகள் 1500 பேருக்கு மேல் நேரடியாக இலாபத்தை பெற்றுக்கொடுத்துள்ள அதேவேளை மேலும் பலருக்கு மறைமுக ஆதாயம் கிடைத்துள்ளது. 2017ஆம் வருடத்தில் சுற்றுலா, விவசாய, மனிதவள அபிவிருத்தி, சிறிய மற்றும் மத்திய அளவிலான உற்பத்தி அபிவிருத்தி, தயாரிப்பு பிரிவுகளை மேலுயர்த்துதல், விற்பனை ஊக்குவிப்பு, விற்பனை கண்காட்சி, சமூக பயிர்வளர்ப்பு வேலைத்திட்டம், தொழில்வாய்ப்பு அதிகரிப்பு வேலைத்திட்டம் போல வெளிநாட்டு வேலைத்திட்டங்களை இணைத்துக்கொண்டு நிகழ்ச்சி நடைமுறைப்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்திற்கு மத்திய மாகாண வரவு செலவு திட்டத்தின் மூலம் எந்தவிதமான வளர்ச்சி நிதியும் நாம் பெற்றுக்கொடுப்பதில்லை. அவர்கள் உழைக்கின்ற நிதியிலேயே வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறார்கள்.

பிரதான செயளாளர் காரியாலயம்

கௌரவ தலைவர் அவர்களே,

2017ஆம் வருடத்திலே ஒதுக்கீடு செய்யப்படுகின்ற வரவு செலவு திட்டத்திலே 145மி. ரூபா கௌரவ மாகாணசபை அங்கத்தவர்களிடம் தலா 2.5மி. ரூபா வீதம் ஒதுக்கீடு செய்ய முன்மொழிகின்ற அதேவேளை அதற்காக மக்களிடமிருந்து பெற்றக்கொள்ளும் கருத்துக்களில் இருந்து அதி உச்ச சேவையை தெரிவு செய்து செயல்படுத்துவதற்கு கௌரவம் மிக்க இந்த சபைக்கு நான் ஆலோசனை வழங்குகிறேன். அதுபோலவே இந்த திட்டத்தை இயன்ற வகையில் உச்ச பலன் அளிக்கும் வகையில் மாகாணசபை திணைக்களங்கள், அமைச்சுகள் மூலமாக செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். மாகாணத்தின் குறைந்த வளர்ச்சி காணப்படுகின்ற பின்தள்ளப்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களை வளர்ச்சியடையச் செய்ய தேவையான அடிப்படை வசதி அபிவிரத்திக்காக 120மி. ரூபா ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்ற அதேவேளை விசேட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்காக 20மி. ரூபா ஒதுக்கித்தருமாறு முன்மொழிவு செய்கிறேன். கடந்த வருடங்களில் எமக்கு கிடைத்த அனுபவங்கள் மூலமாக அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவசர அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேலும் பொது வசதிகள் மற்றும் செயல்திட்டங்களை நடைமறைப்படுத்துவதற்காக இயன்றவரையிலான நிதி

ஒதுக்கீடு செய்திருப்பது மிகவும் முக்கியமானது என்பது எமது கனிப்பாகும். அதனடிப்படையில் 2017ஆம் நிதியாண்டுக்காக பிரதான செயலாளர் காரியாலயம் அடங்கலாக சகல திணைக்களங்களுக்கும் 1.5மி. ரூபா விகிதம் வளர்ச்சிக்காக அவசர அபிவிருத்தி வேலைகளுக்காகவும் வேறு பொது திட்டங்களுக்காகவும் 9மி. ரூபா ஒதுக்கீடு செய்யுமாறு முன்மொழிகின்றேன்.

தேசிய திரைச்சேரி மூலம் 2017ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ளபடி நான் மிகுந்த சிறமப்பட்டு அந்தந்த விடயங்களின் கீழ் அவர்களுக்கு எந்தவிதமான சிரமத்தையும் கொடுக்காது மேற்சொன்னது போல நான் நிதி ஒதுக்கீடு செய்ததை இங்கு குறிப்பிட வேண்டும்.

<u>நிர்வாகமும் நிதி முகாமைத்துவமும்</u>

நிதி முகாமையின்போது நாம் பிரதானமாக முகங்கொடுக்கக்கூடியது மக்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்குமான முறையில் முறையான நிதி முகாமையை பேணுவதும் நடைமுறையிலுள்ள நிதி வளத்தை முன்மாதிரியாக பயன்படுத்தி மேலதிக நிதி திரட்டும் உபாயங்களை தேடிக்கொள்வதாகும் . இதற்காக யதார்த்த வரவு செலவு அறிக்கை பொருத்தமான நிதி முகாமைத்துவம் மற்றும் தரவு அறிக்கை பேணுவதன் மூலம் நம்பகத்தன்மையுள்ள நிதி அறிக்கைக்கு நமது மாகாணசபை எப்பொழுதும் கட்டுப்பட்டுள்ளது. மாகாணசபையின் மீள்நிரப்ப செலவாக எமது சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட இலாபத்திலிருந்தும் மிகுதியை தேசிய திரைச்சேறி மூலமாகவும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறே மாகாண அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக தேசிய திரைச்சேறியினால் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற ஆரம்ப நிதி ஒதுக்கீடு மூலமும் மாகாணத்தின் குறிப்பிடப்பட்ட அளவு அபிவிருத்தி செயல்பாடுகள் அடங்கலாக மாகாணத்தின் அபிவிருத்தி செயல்பாடுகளுக்கான சகல நிதிமுதலீடுகளும் ஒதுக்கீடுகளும் பிழையற்ற தலைமைத்துவத்தின் மூலமாக முதலீடு செய்ய வேண்டியுள்ளது.

கௌரவ தலைவர் அவர்களே,

மாகாணத்தினுள் மக்கள் மனம் கவர்ந்த திறன்வாய்ந்த அரச சேவையொன்றை ஆரம்பிப்பதற்காக அரச உத்தியோகத்தர்களின் அறிவு

திறன் மனப்பாங்கு வளர்ச்சியை விருத்தி செய்து நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இதற்காக அவர்களை தொடர்ச்சியாக பயிற்சி கருத்தரங்குகளில் பங்குபெறச் செய்ய வேண்டியுள்ளது. விடய சம்பந்தமான அறிவு, புதிய சிந்தனை, தொழினுட்ப காலத்திற்கேற்ற அறிவு போல பயனுள்ள வேலைத்திட்டங்கள் அரச மொழிப்பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் பட்டமேற் படிப்பு ஆகியவற்றுக்கு கைக்கொடுத்தல் போன்ற செலவுகளுக்காக 2016ஆம் ஆண்டளவில் 15மி. ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு 10000ற்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தருக்கு பிரதி அனுகூலமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு 2017ஆம் ஆண்டவளில் இவ்வாறு புதிய பயிற்சி சம்மேளனத்தின் உதவியோடு புதிய முறையிலான புதிய வேலைத்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்த எதிர்ப்பார்க்கப் படுகின்ற அதேவேளை இந்த செயல்பாடுகளுக்காக 2017ஆம் ஆண்டுக்காக 5மி. ரூபா ஒதுக்கீடு செய்ய முன்மொழிவு செய்கிறேன்.

இந்த வருடம் மத்திய மாகாணத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் மூலமாக நீங்களும் நானும் சகலரும் இணைந்து செயல்பட்ட விதம் 2017ஆம் வருடத்திலும் நிதி ஒதுக்கீடு செய்வது பற்றியும் எனது உரையில் உங்களுக்கு மிகுந்த தெளிவு ஏற்பட்டிருக்குமென நினைக்கிறேன்.

மாகாணத்தின் இலாபத்தை தேடிக்கொள்ளும் வழிகளும் குறைநிரப்பு செலவுகளை ஈடுசெய்வதும்

இந்த வருடத்தில் மாகாண சபையில் குறைநிரப்பு செலவாக 23375மி. ரூபாவுக்கு மேலதிகமாக குறைநிரப்பு நிதியாக மத்திய மாகாணத்தின் இலாபமாக 6044மி. ரூபா தேடிக்கொள்ள வேண்டியுள்ளது. அதுபோலவே 2017ஆம் ஆண்டு முழு குறைநிரப்பு செலவாக எம்மால் கணக்கிடப்பட்டுள்ளது 32800மி. ரூபாவாகும். இருந்தாலும் எமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது 29943மி.ரூபா மட்டுமே. இதில் தனிப்பட்ட சம்பள கொடுப்பனவுக்காக 26280மி. ரூபா செலவாகும். இந்த செலவை எந்தவிதத்திலும் எம்மால் குறைக்கவோ வெட்டிவிடவோ முடியாது. இதனடிப்படையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனைய குறைநிரப்புகளுக்காக நாங்கள் எதிர்ப்பார்த்த நிதி 6520மி. ரூபாவாக இருந்தபோதும் எமக்கு கிடைத்துள்ள

நிதி 3663மி. ரூபாவாக உள்ளது. எமது திட்டத்தின் படி 2857மி. ரூபா எமக்கு குறைவாக உள்ளது. இதனடிப்படையில் 2017ஆம் ஆண்டில் எமது நிறுவனங்களின் சேவைகள் மிகவும் சிக்கனமான முறையில் அத்தியாவசிய செலவுகளை மாத்திரம் செலவுசெய்ய வேண்டியுள்ளது. சகல அமைச்சுகளும் திணைக்களங்களும் 2017ஆம் வருடத்தில் அபிவிருத்தி நிதி, குறைநிரப்பு நிதி சிக்கனமான வழியிலெ இந்த வருடத்தை கொண்டுசெல்லும் வகையிலே முகாமைப்படுத்திக் கொள்ளுமாறு அரசியல் தலைவரிடமும் நிர்வாகிகளிடமும் நிர்வாகத்திற்கு பொறுப்பான சகலரிடமும் நான் பொதுவில் கேட்டுக்கொள்கிறேன். 2017ம் ஆண்டு எமக்கு மேலும் சில சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இந்த வருடத்தில் மாகாண வருமானமாக எமக்கு அளிக்கப்பட்ட இலக்கு 6044மி. ரூபாவாகும். 2017ஆம் ஆண்டில் இதன் அளவு 7454மி. ரூபாவாகும். இது 1410மி. ரூபாவால் உயர்வடைந்துள்ளது. இந்த நிதியை நாம் மாகாணத்தின் வருவாயாக கட்டாயமாக தேடிக்கொள்ள வேண்டும். ஏனெனில் இந்த நிதியை குறைத்துக்கொண்டே குறைநிரப்பு நிதியாக தேசிய திரைச்சேரி நமக்கு 2017ஆம் ஆண்டுக்கான குறைநிரப்பு நிதியாக வழங்கும். மாகாணத்தினுள் தேடிக்கொள்ள வேண்டிய வருமானத்தை திறமையான முறையிலும் முறையான வகையிலும் எதிர்ப்பார்க்கின்ற இலக்கை அடைய இயன்ற முறையிலான திட்டமிட்ட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்த அந்தந்த நிறுவன தலைவர்கள் செயற்பட வேண்டும். இலக்கை பூர்த்தி செய்கின்ற நிறுவனங்களின் செயற்பாடுகளையும் பலங்களையும் மதிப்பீடு செய்வதற்கும் நான் எதிர்ப்பார்க்கிறேன்.

கௌரவ தலைவர் அவர்களே,

எமது மாகாண மக்களைப் போலவே நாட்டின் ஏனைய மக்களது நலனுக்காகவும் அக்கரை செலுத்தி அர்த்தமான தர்மமான தலைமைத்துவம் கொடுத்து செயல்படுகின்ற அதி உயர் பிரதம பௌத்தகுரு உட்பட ஏனைய சகல குருமாரிடமும் நான் வணக்கத்தோடு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே 2017ஆம் ஆண்டுக்காக உங்கள் அனைவரது ஆசீர்வாதத்தையும் எமது மாகாண உயர்ச்சிக்காக எதிர்ப்பார்க்கிறேன்.

மேலும் எமது மாகாண நடவடிக்கைகளில், மாகாணத்தின் முன்னேற்றம் கருதி நிதமும் அக்கறையுடன் இருந்து அபிவிருத்தி கருமங்களின்போது ஆர்வம் காட்டி எமக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிவரும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களும், கௌரவ பிரதம மந்திரி ரனில் விகரமசிங்ஹ அவர்களுக்கும் எனது கௌரவமான நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் மாகாண சபையின் அனைத்து நடவடிக்கைகள் மீதும் நிதமும் கவனம்செலுத்தி எம்மைச் சரியான திசையில் செல்ல உற்சாகம் வழங்கும் கௌரவ ஆளுநர் திருமதி நிலூகா ஏக்கனாயக்க அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியை தெரிவிக்கிறேன். எமது மாகாண சபையை வழிநடத்தி, அதன் செயற்பாடுகளை பக்கச்சார்பின்றி மேற்கொண்டுவரும் கௌரவ தலைவர் அவர்களுக்கும், உபதலைவருக்கும் கௌரவ அமைச்சர்களுக்கும் எனது மனப்பூர்வ நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மாகாணசபையின் நடவடிக்கைகளின்போது எமது குறைகளை சுட்டிக்காட்டி அவற்றை சரியான வகையில் மேற்கொள்ள ஆலோசனைகளை முன்வைக்கும் எதிர்கட்சி தலைவர் உள்ளிட்ட உறுப்பினர் குழுவுக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

அதுபோலவே மாகாணத்தின் வளர்ச்சிக்காக பாரிய சேவையாற்றிய முன்னாள் கௌரவ நகரசபை தலைவர்கள், கௌரவ பிரதேசசபை தலைவர்கள், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மூவர் உட்பட மற்றும் பிரதேச செயலகத்தை அடங்கிய சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள். 2016ஆம் ஆண்டில் மாகாண அரச சேவையின் சகல உத்தியோகத்தர்களையும் பயன்படுத்தி முறையாக நிதி முகாமைத்துவம் செய்து அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றங்களை கண்டறிந்து குறைபாடுகளை திருத்தியமைத்து செயற்படும் பிரதான செயலாளர், அரச சேவை ஆணைக்குழுவின் தலைவர், செயலாளர் மற்றும் பிரதான செயலகத்தின் செயலாளர் அமைச்சின் செயலாளர்கள், மேலதிக பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர் அடங்கலாக அரச உத்தியோகத்தருக்கும் எனது நன்றியை தெரிவிக்கிறேன்.

மேலும் மாகாண சபையின் செயற்பாடுகளை வினைத்தினாக நடாத்தி செல்ல ஒத்துழைப்பு தந்த சபை செயலாளர் காரியாலயத்தின் ஊழிகளுக்கும்,

மாகாண சபையின் அனைத்து செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றி கொள்ள ஒத்துழைப்பு வழங்க பாதுகாப்பு பிரிவினர் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்து கொள்கின்றன். எதிர்வரும் வருடங்களில் உங்களுடைய சிறந்த ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன்.

மத்திய மாகாண சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் முன்வைக்கும் எமது ஊடகத்துறை அன்பர்களுக்கு எனது நன்றியை தெரிவிக்க விரும்புகின்றேன். அது போல உண்மை தகவல்களை மக்களுக்கு தெரியப்படுத்த ஊடக அன்பர்களது ஒத்துழைப்பை நான் எதிர் காலங்களிலும் எதிர் பார்க்கின்றேன்.

இறுதியாக மத்திய மாகாணத்தின் அனைத்து பிரஜைகளதும் வாழ்க்கை தரத்தை உயர்துவதற்கு 2017 ஆம் ஆண்டு உங்கள் அனைவரும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதுடன் எனது வரவு செலவு அறிக்கை வாசிப்பை நிறைவு செய்கின்றேன்

உங்கள் அனைவருக்கும் தலதாவின் மகிமை கிட்டட்டும்

சரத் ஏகநாயக்க

முதலமைச்சர்

மத்திய மாகாணம் சபை